வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 16.02.2022 புதன்கிழமை இதழ் : 73 பக்கங்கள் : 16


மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## விமர்சன குரல்களை மௌனமாக்கினால் ஜனநாயகம் குறைமதிப்புக்கு உள்ளாகும்!

### ஐ.நா வதிவிடப் பிரதிநிதி சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 16

விமர்சனக் குரல்களை மௌனமாக்குவது பொது விவாதம், சுதந்திரம் மற்றும் அனைவரின் மனித உரிமைகளையும் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது என இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரம வீட்டின் மீது நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலின் 15



## தமிழ்த் தேசியக் கட்சிகள் நடத்தும் மக்கள் கருத்தரங்கு இன்று யாழில்

### இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், பெப். 16

தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நடத்தவுள்ள மக்கள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய கட்சிகள் இந்த மக்கள் கருத்தரங்கு நிகழ்ச்சியை 15

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை போராளிகளாக காட்ட முயற்சி!

## சித்தார்த்தன் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்ரவரி 16

காணாமல் ஆக்கப்பட்டவர்களை போராளிகளாகக் காட்டுவதற்கே அரசாங்கம் பெரும் முயற்சிகளை எடுத்து வருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். 15



வரலாற்றுப் பிரசித்திபெற்ற வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றபோது...
வடமராட்சி நிருபர்

## 48 மணிக்கு மேல் காய்ச்சலா? சிகிச்சை பெறுவது அவசியம்!

### சுகாதார பணிப்பாளர் அறிவுறுத்து

கொழும்பு, பெப். 16

"ஒமைக்ரோன், டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் ஆகியவை சமூகத்தில் பரவுவது அவதானிக்கப்படுகின்றது. 48 மணி நேரத்துக்கு மேலாகக் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவேண்டும்", என்று சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் அறிவுறுத்தியுள்ளார்.

மக்கள் தாங்கள் எந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்து தாங்களாகவே முடிவுகளை எடுக்க வேண்டாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். 15

## வெளிநாடு செல்வோருக்கு யாழில் இன்றுமுதல் பி. சி. ஆர்.!

யாழ்ப்பாணம், பெப். 16

வெளிநாடு செல்வோருக்கான பி.சி.ஆர் பரிசோதனைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் இன்று முதல் மீளவும் நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வந்த சுகாதார தொழில்சங்கங்களின் பணிப்பகிஷ் 15

## ஐ.நா. அறிக்கை கிடைத்தது 19ஆம் திகதிக்கு முன் பதில்

### அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

ஐ. நா மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அம்மையாரால் முன்வைக்கப்படவுள்ள அறிக்கையின் பிரதி இலங்கை அரசாங்கத்துக்குக் கிடைக் 15



## வத்திக்கான் செல்கிறார் பேராயர் மல்கம் ரஞ்சித்

### இலங்கை அரசுக்கு சிக்கல்

கொழும்பு, பெப். 16

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இம்மாத இறுதியில் வத்திக்கானுக்கு பயணம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளார்.

கர்தினால் தனது இந்த பயணத்தின்போது, பாப்பரசர் உட்பட வத்திக்கானின் உயர் அதிகாரிகளை சந்தித்து, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான தற்போதைய நிலைமைகளை தெளிவுபடுத்த திட்டமிட்டுள்ளார் என தெரியவருகிறது.

அமெரிக்க கத்தோலிக்க திருச்சபை 15

## அடுத்த 3 மாதங்களுக்கு மின்வெட்டு இடம்பெறாது

கொழும்பு, பெப். 16

அடுத்த மூன்று மாதங்களுக்கு திட்டமிடப்பட்ட மின் வெட்டு எதுவும் இடம்பெறாது என்று இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

எது எப்படி இருப்பினும் பொதுமக்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மின்சாரத்தை சேமிப்பதுடன், தனிப்பட்ட 15

## பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க கோரி கொழும்பில் நேற்று கையெழுத்து வேட்டை!




கொழும்பு, பெப். 16

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்ய வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இடம்பெற்றுவரும் கையெழுத்து வேட்டை கொழும்பில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி இரண்டு மணி நேரங்களுக்கு மேலாக இடம்பெற்றது. 15

## கொரோனாவுக்கு 30 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 16

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 30 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 20 ஆண்களும், 10 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 தொடக் 15

## பீரிஸ், அலி சப்ரி உள்ளிட்ட குழு இந்த முறை ஜெனீவா பயணம்!

கொழும்பு, பெப். 16

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடர் இம்மாத இறுதியில் ஆரம்பமாக உள்ள நிலையில் இலங்கை குழு சார்பில் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், அலி சப்ரி உள்ளிட்டவர்கள் பயணமாக உள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மாத இறுதி வாரத்தில் 15

## இப்படியும் நடக்கிறது...!

'ஈழநாடு' குழுமத்தின் தலைவர் குகநாதன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரைப் பார்த்து அடிக்கடி சொல்லுவார், "இவர்கள் பிள்ளையைப் பெறவும் விரும்புகின்றார்கள். அதே வேளை, கன்னித் தன்மையுடன் இருக்கவேண்டும்", என்றும் நினைக்கின்றார்கள் என்று.

அவர்கள் கொள்கையில் உறுதியாக இருப்பதால், அதற்காக கன்னியாகவே இருக்கவேண்டும் என்பது கொள்கை என்றால் அவர்களால் எந்தக் காலத்திலுமே பிள்ளை பெற்றுக் கொள்ளமுடியாது. அவர்கள் பிள்ளையைப் பெறவேண்டும் என்றால் சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்யத்தான்வேண்டும் என்பது அவரின் கருத்தாக இருக்கவேண்டும்.

சில வருடங்களுக்கு முன்னர் சங்கிலியன் பூங்காவில் நடந்த முன்னணியின் கூட்டம் ஒன்றில் பேசிய ஒருவர், அவர்களின் தலைவரை பிரபாகரனுடன் ஒப்பிட்டு பேசியது பலருக்கும் சிரிப்புக்கிடமாக இருந்தபோதிலும், முன்னணியின் தலைவர் தனது கொள்கையில் உறுதியாக இருப்பதை வைத்துத்தான் அவர் அப்படிச் சொல்கிறார் என்று நினைத்தவர்களும் உண்டு.

ஒருநாடு இரு தேசம் என்ற தமது கொள்கையில் அவர்கள் உறுதியாக இருப்பது பாராட்டுக்குரியதுதான், அதற்காக அதே கொள்கையைத்தான் விடுதலைப் புலிகளும் கொண்டிருந்தார்கள் என்று முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் இப்போது தெரிவித்திருப்பதைப் பார்க்கின்றபோது, அவர்களும் இப்போது மற்றைய அரசியல்வாதிகளுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபித்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் ஆயுதத்தில் மாத்திரமே நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். அவர்கள் அரசியல் தீர்வு ஒன்றுக்கு எந்தக் கட்டத்திலும் வரப்போவதில்லை என்று, அரசாங்கம் சர்வதேசத்தை புலிகளுக்கு எதிராக அணிதிரட்ட எடுத்த சதியை முறியடிக்க, புலிகள் தமிழீழத்திற்கு நிகரான தீர்வை ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகக் கூறியே பேச்சுக்கு முன்வந்திருந்தார்கள் என்பது தெரிந்ததுதான். ஆனால், அதற்காக அவர்கள் தனிநாட்டுக்காக போராடவில்லை, தமிழர் தேசத்தை அங்கீகரிக்கவே போராடினார்கள் என்று அவர் கூறியிருப்பது புலிகள் மீதான சேறடிப்பு என்பதை புரிந்துகொள்ள அதிகம் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லை.

தனது கருத்து, சர்ச்சையை ஏற்படுத்திய பின்னர், அது குறித்து விளக்கமளித்த கஜேந்திரன், பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:

"...விடுதலைப் புலிகள் தமிழீழத்திற்காக போராடிவந்த நிலையில், அரசுடன் நேரடியாக இடம்பெற்ற பேச்சுக்களிலும் சர்வதேச மத்தியஸ்தத்துடன் இடம்பெற்ற பேச்சுக்களின் போதும் தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை அரசுத் தரப்பு முன்வைத்தால் பரிசீலிக்கத் தயாராக இருந்தார்கள் என்ற உண்மையை வெளிப்படுத்த முற்பட்ட வேளையில், நான் கூறிய கருத்துக்களானவை, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்காக போராடவில்லை என தவறாக அர்த்தப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. தெளிவற்ற வகையில் அந்தக் கருத்து வெளிவந்தமைக்காக நான் மனம் வருந்துகின்றேன்."

மேற்கண்டவாறுதான் தனது மன்னிப்பு அறிக்கையில் கஜேந்திரன் தெரிவித்திருக்கின்றார்.

'டான் ரீ.வி'யில் சுரேஷ் பிறேமச்சந்திரனுடனான நிகழ்ச்சியில் சுரேஷ், "2009 வரை தனிநாட்டுக்கான யுத்தம் ஒன்று நடக்கிறது. தனி நாட்டுக்கான யுத்தம் நடக்கும்போது எல்லோருக்கும் ஓர் எதிர்பார்ப்பு இருந்தது." என்று கூறிக் கொண்டிருந்தபோது குறுக்கிட்ட கஜேந்திரன் எம். பி., "தனிநாட்டுக்கான யுத்தம் அல்ல, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கான யுத்தம்" என்றார். அத்துடன், "இவர்கள் (சுரேஷ்), அரசாங்கம் புலிகளை அழித்தது சரியென்று சொல்லப் பார்க்கிறார்", என்றும் கூறினார். இதன் மூலம் அவர் சொல்ல வருவது, புலிகள் தனிநாடு கேட்டுத்தான் போராடினார்கள் என்றால் அது புலிகளை அரசு அழித்தது சரி என்றாகிவிடும். அப்படியல்ல, அவர்கள் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கவே போராடினார்கள் என்கிறார் கஜேந்திரன்.

அவரின் கருத்துக்கும், மறுப்பு அறிக்கைக்கும் எந்த தொடர்பும் இருப்பதாக தெரியவில்லை. புலிகள், பேச்சு மேசையில் தனிநாட்டுக்கு நிகரான தீர்வை முன்வைத்தால் பரிசீலிக்க தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்களே தவிர, தமிழ்த் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கக்கூடிய தீர்வை பரிசீலிக்கத் தயராக இருந்தார்கள் என்பது சரியானதல்ல.

ஒருவர் தனது மனதில் என்ன நினைக்கின்றார் என்பதை அறியவேண்டும் என்றால், அவரை நன்றாக மதுஅருந்த வைத்துவிட்டு அவரைக் கிளறினால் அடிமனதில் இருப்பதை அறிந்துகொள்ளலாம் என்பார்கள். மதுபோதை ஊட்டுவதும், ஒருவரை கோபப்படுத்துவதும் ஒன்றானதுதான். ஒருவரை கோபப்படுத்துவதாலும் அவரின் அடிமனதை அறியலாம் என்பார்கள். கோபப்படுத்தி, சுரேஷ் அவரின் ஆழ்மனதை வெளிச்சத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்.

- ஊர்க்குருவி

# நாணய நிதியத்தை நாடுவது குறித்து அடுத்த வாரம் அறிவிப்பு வெளியாகும்

### அமைச்சர் பந்துல குணவர்தன தகவல்

கொழும்பு, பெப். 16

**பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது குறித்து அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அறிவிப்பதாக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார் என வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.**

நிதி அமைச்சர் சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ச்சியாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருவதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

எவ்வாறிருப்பினும் கடந்த வாரம், இலங்கை அரசாங்கத்தினால் தற்போதுவரை நிதியுதவியை வழங்குமாறு எவ்வித கோரிக்கையும் முன்வைக்கப்படவில்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொடர் பாடல் திணைக்களப் பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவித்திருந்தார்.

தற்போது நாடு முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்திடம் தொழில்நுட்ப ரீதியான ஆதரவைக் கோரியிருப்பதாகவும் அதற்கிணங்க நிபுணர் குழுவொன்று விரைவில் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாகவும் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இது குறித்து சர்வதேச நாணய நிதியத்துக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்திருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நிதியமைச்சில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள பேரண்ட நிதிப்பிரிவின் இயலுமையை வலுப்படுத்துவதற்கு அவசியமான பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு உடன்பட்டிருப்பதாகவும் அந்தச் செயற்திட்டம் ஜனவரி 20 ஆம் திகதி நிகழ்நிலை ஊடாக ஆரம்பிக்கப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியம் பதிலளித்திருந்தது.

இந்நிலையில் கொழும்பிலுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு நான்காவது மீளாய்வுப் பணிகளைப் பூர்த்தி செய்திருப்பதாகவும் அது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையில் கலந்துரையாடப்படும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் கெரி ரைஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இந்த அறிவிப்பு தொடர்பில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கேட்டபோதே அமைச்சர் பந்துல மேற்கண்டவாறு பதிலளித்தார். (அ)

# மற்றொரு சமூக ஆர்வலருக்கும் சி.ஐ.டி. விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 16

மற்றுமொரு சமூக ஆர்வலர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் வாக்குமூலம் பதிவு செய்ய அழைக்கப்பட்டுள்ளார்.

சமூக ஆர்வலர் மனோரமா வீரசிங்கவை எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை ஆஜராகுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அழைப்பாணை அனுப்பியுள்ளனர்.

நேற்று முன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் அழைப்பாணை தமக்குக் கிடைத்துள்ளதாக தெரிவித்த மனோரமா வீரசிங்க, அழைப்பாணைக்கான காரணம் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை எனவும் கூறினார்.

இந்த விசாரணை சமூக ஊடகங்கள்தொடர்பானது என்று கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது, ஆனால் சரியான விவரங்கள் குறிப்பிடப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

குறித்த திகதியில் தனது சட்டத்தரணியுடன் இணைந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஆஜராகவுள்ளதாக வீரசிங்க மேலும் தெரிவித்தார்.

2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக கடந்த ஆண்டு நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெளியிட்ட சர்ச்சைக்குரிய கருத்துக்காக சமூக ஆர்வலர் ஷெஹான் மாலக்க கமகே சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டார்.

எவ்வாறாயினும், மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டதை அடுத்து, ஷெஹான் மாலக்க கமகே நேற்று காலை விடுவிக்கப்பட்டார். (அ)

# தென்மராட்சியில் இருவருக்கு கொரோனா, டெங்கு தொற்று

யாழ்ப்பாணம், பெப். 16

தென்னமராட்சியில் இரண்டு நபர்களுக்கு கொரோனா, டெங்கு நோய்த் தாக்கங்கள் ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளை ஞர் ஒருவர், சரசாலை வடக்கு பகுதியைச் சேர்ந்த 34 வயது டையவர் ஒருவர் ஆகியோருக்கே தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

காய்ச்சல் பாதிப்புக்கு உள்ளான இருவரும் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குச் சென்றுள்ளனர்.

அவர்கள் இருவரும் அன்ரிஜென் மற்றும் டெங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இருவருக்கும் இரண்டு நோய்த் தாக்கங்களும் உறுதி செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியிலேயே டெங்குப் பாதிப்பு அதிகம் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 304 பேர் பூரண குணம்

கொழும்பு, பெப். 16

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்றுவந்த மேலும் 304 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர் என தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 595,649ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு இலத்திரனியல் அட்டை வழங்குவதற்கு முடிவு

கொழும்பு, பெப். 16

சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலும், வசிக்கும் குறைந்த வருமானம் கொண்ட 40 குடும்பங்களுக்கு 2000 ரூபாவுக்கு பொருட்களை கொள்வனவு செய் வதற்கான இலத்திரனியல் அட்டையொன்றை வழங்குவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெண் தொழில் முனைவோரினால் நடத்தப்படும் சிறிய சிறப்பு அங்காடிகளில், குறித்த இலத்திரனியல் அட்டையின் ஊடாக பொருட்களை கொள்வனவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பெண் தொழில் முனைவோரின் சிறப்பு அங்காடி வலையமைப்பொன்றை நிறுவுவதற்கு அமைச் சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
16.02.2022 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஒன்றுபடுதலை ஆராதித்தல்!

யுத்தம் நிறைவுற்று பன்னிரெண்டு வருடங்கள் கடந்துவிட்டன. இந்தக் காலத்தில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் பலர் தன்னார்வ அடிப்படையில், தங்களை ஈடுபடுத்தியிருந்தனர். சிவில் சமூக குழுக்கள், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் ஈடுபட்டனர். ஆரம்பத்தில் கூட்டமைப்பை பலப்படுத்தும் முயற்சிகளில் பலரும் ஈடுபட்டனர். ஆனால், அதில் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. பின்னர், இந்த முயற்சியே மாற்றுத் தலைமையொன்றை உருவாக்கும் முயற்சியாக தடம் மாறியது. இந்த பின்புலத்தில்தான் தமிழ் மக்கள் பேரவை உருவாகியது.

ஆனால், மாற்றுத் தலைமைக்கான முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்த மூன்று கட்சிகளும் தனித் தனியாக சென்றன. இந்த பின்னணியில், தமிழ் மக்கள் பேரவை முற்றிலும் தோல்விடைந்தது. தமிழ் மக்கள் பேரவையின் தோல்வியுடன், சிவில் சமூக குழுக்களின் முயற்சியால் கட்சிகளை ஒன்றுபடுத்தலாம் என்னும் நம்பிக்கையும் புஸ்வாணமாகியது. அது, இனி ஒரு போதும் சாத்தியமில்லை என்னும் நிலைமையே தற்போது காணப்படுகின்றது.

இந்த அனுபவங்களின் வழியாக ஒரு விடயம் உணரப்பட்டது. அதாவது, ஒரு நெருக்கடி நிலைமை தோன்றாமல் தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களுக்குள் ஒன்றுபடப் போவதில்லை என்னும் உண்மையை பலரும் உணர்ந்து கொண்டனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமையானது, ஆறு தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றுபடுத்தியிருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட ஆவணத்தில் அனைத்து கட்சிகளின் தலைவர்களும் ஒன்றுபட்டிருப்பதால், ஒப்பீட்டிப் படையில் அண்மைக்காலத்தில் உருவாகிய அரசியல் கூட்டு நகர்வுகளில் இது சற்று முன்னேற்றகரமான ஒன்றாகவே தெரிகின்றது. இதனை ஆதரிக்க வேண்டியது தமிழ்த் தேசிய தரப்புக்களின் பணியாகும்.

2009 - மே இற்கு பின்னரான அரசியல் என்பது, அடிப்படையில் தேர்தல் மைய அரசியல்தான். ஒரு மக்கள் இயக்க அரசியல் தேவையென்று பலரும் உணர்ந்தாலும்கூட, அதனை நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனவே தற்போது இருப்பதை கொண்டுதான் சமைக்க வேண்டும் என்னும் நிலையிலேயே தமிழ்த் தேசிய அரசியல் இருக்கின்றது. தற்போதுள்ள கட்சிகளுக்கு வெளியில் தமிழர்களுக்கு அரசியல் இல்லை என்பதுதான் இன்றைய நிலையாகும்.

அரசாங்கம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசிவருகின்றது. இதே வேளை, அதில் தற்போது ஓரளவு சாதகமாக இருக்கின்ற அரசியல் வாய்ப்புக்களும்கூட இல்லாமல் போய்விடலாம் என்னும் ஆபத்தும் காணப்படுகின்றது. இந்த அச்சமே தமிழ் கட்சிகளுக்கான அரசியல் நெருக்கடியாக மாறியது. இந்த நெருக்கடியே ஆறு கட்சிகள் ஒன்றுபடுவதற்கான சூழலை தோற்றுவித்திருக்கின்றது. இந்த ஆறு கட்சிகளும் கடிதம் அனுப்புவதற்கு அப்பால் பயணிக்குமாக இருந்தால், தமிழ் தேசிய அரசியல் பரப்பில் காணப்படும் மனச் சோர்வை போக்கவும், அதேவேளை, தமிழ் மக்கள், தேர்தல்கள் மூலம் சிதறிப் போவதையும் தடுக்க முடியும். இது தொடர்பில் குறித்த ஆறு கட்சிகளின் தலைவர்களும் சிந்திக்க வேண்டும். அதே வேளை தமிழ்த் தேசிய அரசியல் மீது கரிசனை கொண்டிருக்கும் தமிழ் அபிமானிகளும், புத்திஜீவிகளும் இதனை ஊக்குவிக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்னையில்லை என்பதை அரசாங்கம் கூறிவருகின்ற நிலையில், அதனை தந்திரோபாய ரீதியில் தமிழ் தேசிய தரப்புக்கள் எதிர்கொள்ள வேண்டும். இதனை தனித்து நின்று சாதிக்க முடியாது. தமிழர் அரசியல் மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தங்களுக்குள் இயலுமான வரையில் ஒன்றுபடுவதற்கான புள்ளிகளை கண்டுபிடிக்க வேண்டுமேயன்றி, தங்களுக்குள் பிளவுபடுவதற்கான காரணங்களைத் தேடக் கூடாது. கட்சிகள் தங்களுக்குள் மோதுகின்ற போது, அதன் பலன்களை, அரச ஆதரவு தமிழ் கட்சிகளே அறுவடை செய்யும்.

# இராஜராஜ சோழன் காலத்து கல்வெட்டுகள் வெளிப்படுத்தியுள்ள சரித்திர உண்மைகள்

டி.எஸ்.சுப்பிரமணியன்



**பராந்தகச் சோழன் கல்வெட்டும் இந்தக் கிராமத்தை இலுப்பைத் தண்டலம் என்றே குறிப்பிடுகிறது. எனவே, இக்கிராமத்தின் பெயர் சுமார் 1,100 ஆண்டுகளாக மாறாமல் இலுப்பைத் தண்டலம் என்றே வழங்கிவருகிறது.**

இராஜராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த இரண்டு கல்வெட்டுகள், தமிழகத்தின் அரக் கோணத்திலிருந்து எட்டு கி.மீ. தொலைவில் உள்ள இலுப்பைத் தண்டலம் என்ற கிராமத் தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டுகளில் ஒன்று அக்காலத்தில் பெரி தாக இருந்திருக்க வேண்டும். அது மூன்றாக உடைந்து, நடுப் பகுதி மட்டும்தான் இப் போது கிடைத்துள்ளது. கல்வெட்டுப் படி யைக் கல்வெட்டு அறிஞர்கள் எ.சுப்பராயலு, வெ.வேதாசலம், சு.இராஜவேலு மூவருக்கும் அனுப்பியபோது, இக்கல்வெட்டு கள் ராஜராஜ சோழன் காலத்துக் கல்வெட்டு கள் என்று கூறினார்கள்.

இந்தக் கல்வெட்டின் முக்கியத்துவம் என்னவென்றால், அது கிராமத்தின் பெயரை இலுப்பைத் தண்டலம் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. அது பன்மா நாட்டில் அடங்குகிறது என்று கூறுகிறது. அதாவது, இந்த அழகிய கிராமத்தின் பெயர் இலுப்பைத் தண்டலம் என்று ஆயிரம் ஆண்டுகளாகப் பெயர் மாறாமல் வழங்கிவருகிறது. இந்தக் கல்வெட்டு இராஜராஜ சோழனின் மெய்க் கீர்த்திகளை (பிரசஸ்தி) - அவர் போரில் வெற்றி கண்டு, நாடு பிடித்த பகுதிகளையெல்லாம் - பட்டியலிடுகிறது.

இந்தக் கல்வெட்டு, திருவெண்காடிச்சாணி என்ற பெயர் கொண்ட ஒரு பிராமணப் பெண்மணி இலுப்பைத் தண்டலத்திலுள்ள (அகத்தீஸ்வரர்) கோயிலுக்குத் தானமாகக் கொடுத்த நிலம் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகிறது. அக்கோயிலின் மூன்று சந்தி பூஜைக்கும் (மூன்று வேளை காலை, மதியம், மாலை வழிபாட்டுக்குரிய) செலவுகளுக்கு இந்த நிலத்தை அந்தப் பெண்மணியும் அவரது உறவினரும் தானமாக அளித்துள்ளனர்.

இந்தக் கல்வெட்டு அந்த நிலங்களின் எல்லைகளைக் குறிப்பிடுகிறது என்று சுப்பராயலு, வேதாசலம், இராஜவேலு ஆகியோர் கூறினார்கள். மணிகார்த்திக், அவருடைய நண்பர் வசந்த் ஆகியோரும், இலுப்பைத் தண்டலம் கிராமத்தைச் சேர்ந்த மக்களும் இந்தக் கல்வெட்டைக் கடந்த ஜனவரி மாதம் அகத்தீஸ்வரர் கோயிலுக்கு மிக அருகில் பார்த்துவிட்டு, அரசு கவின் கலைக் கல்லூரி முதல்வர் கு.சந்திரசேகரனிடம் தெரிவித்துள்ளனர். கார்த்திகேயனும் வசந்தும் சந்திரசேகரனின் மாணாக்கர்கள்.

பேராசிரியர் சந்திரசேகரனும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரான ம.இராஜேந்திரனும் நானும் ஜனவரி 20ஆம் திகதி இலுப்பைத் தண்டலம் கிராமத்துக்குச் சென்றோம். அங்கு மேலும் ஒரு கல்வெட்டை கார்த்திகேயன் காண்பித்தார். அது பராந்தகச் சோழன் காலத்தைச் சேர்ந்தது என்று சந்திரசேகரன் கூறினார். அவ்வூரில் கோயில் அருகில் பல கல்வெட்டுகள் உள்ளன.

"இலுப்பைத் தண்டலம் ஒரு அழகிய, வித்தியாசமான ஊர். வயல்கள் சூழ்ந்த மருத நிலப் பகுதி. இவ்வூரிலுள்ள கோயிலின் பெயர் அகத்தீஸ்வரர் கோயில். இந்தப் பெயர் கொண்ட கோயில்கள் சோழர் காலத்தில் குறைவாக இருந்தன. இப்போது பார்ப்பதைவிட இந்தக் கோயில் பெரிதாக இருந்திருக்க வேண்டும்" என்று ம. இராஜேந்திரன் கூறினார்.

இக்கோயில் முன்பு பெரிதாக இருந்ததாகவும் அது சிதிலமடைந்துபோனதால், 18 ஆண்டுகளுக்கு முன்பு கோயிலைப் புதுப்பித்துக் கட்டினோம் என்றும் அந்த ஊர் மக்கள் கூறினார்கள். கோயிலின் கர்ப்பக்கிரஹத்தில் அழகிய, பெரிய லிங்கம் ஒன்று உள்ளது. விநாயகர், முருகன், துர்க்கை, பைரவர் போன்றோருக்குத் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. இந்தக் கோயிலைப் புதுப்பித்துக் கட்டிய போது, கல்வெட்டுகளை ஒரு இடத்தில் வைத்துள்ளனர். "அந்தக் கல்வெட்டுகளை ஜனவரி 18ஆம் திகதி பார்த்தபோது, குறிப்பிட்ட ஒரு கல்வெட்டு மிகவும் முக்கியமானதாகவும் தெளிவாகவும் இருந்தது. மேலும், அந்தக் கல்வெட்டின் பின்புறம் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. உடனே, எங்கள் ஆசிரியர் சந்திரசேகரனிடம் கூறினோம்" என்றார்கள் கார்த்திகேயனும் வசந்தும்.


"இக்கல்வெட்டைச் செதுக்கியவர் ஆந்திரத்தைச் சேர்ந்த ஒரு பொறிப்பாளர். ஏனென்றால், ஒவ்வொரு எழுத்தின் மேலும் ஒரு தலைக்கட்டு உள்ளது. அக்காலத்தைச் சேர்ந்த தெலுங்கு, கன்னடக் கல்வெட்டுகளில் இம்மாதிரி எழுத்துகளின் மேல் தலைக்கட்டுகள் (Serif Marks) இருக்கும்' என்று கல்வெட்டு ஆய்வாளர் இராஜவேலு கூறினார். இக்கோயிலின் கல் பலகைகளின் மீது பெரிதாக மீன் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி சுப்பராயலுவிடம் கேட்டபோது 'அந்த மீன் சின்னங்கள் மங்களகரத்தைக் குறிப்பன. அவை பாண்டிய நாட்டைச் சேர்ந்தவை அல்ல. ஏனென்றால், பாண்டிய நாட்டுச் சின்னம் இரட்டைக் கயல்கள் ஆகும். இங்கு கல் பலகைகளில் ஒரு மீனின் சின்னம்தான் உள்ளது' என்றார்.

இவ்வூரில் புதுக் கற்காலத்தைச் சேர்ந்த பல கருவிகளும் கிடைத்துள்ளன.

பெப்ரவரி 5, 2022 அன்று இந்தியத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**பெப்ரவரி - 16 புதன்கிழமை**
**பிலவ வருடம் - மாசி 04**
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : பௌர்ணமி




**மேடம்**
நல்ல செயல்களை செய்து கொண்டே இருப்பீர்கள். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். எடுத்த விஷயத்தை முடிப்பீர்கள். பிரச்னை அண்டாது. வியாபாரத்தில் நல்ல லாபம் பார்ப்பீர்கள்.

**இடபம்**
புதிய வருமான வாய்ப்பு தேடி வரும். பயன் மிக்க நாள். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது நல்லது. கலைத்துறையினருக்கு கூடுதல் நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**
பிராணிகளின் மீது கருணை வரும். நற்செய்தி கிடைக்கும். கவலை ஒன்று தீரும். வெளிநாட்டு வியாபாரம் லாபம் தரும். அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்த்த நன்மை கிடைக்கும்.

**கடகம்**
எதிர்பாலினத்தினரால் நன்மை ஏற்படும். நட்பு வட்டம் விரியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உங்களின் செயல் திறன் கூடும். எடுத்த செயல்களில் பின்வாங்காமல் முன்னேறுவீர்கள்.

**சிம்மம்**
சாதனை செய்து உறவினர் மத்தியில் கைதட்டல் பெறுவீர்கள். இத்தனை காலம் காத்திருந்த விஷயம் கனிந்து பலனளிக்கும். சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும்.

**கன்னி**
உயர்பதவியை எட்டுவீர்கள். பேச்சினால் நன்மை வரும். உறவினர்களுடன் இருந்து வந்த உரசல்கள் இன்று முடியும். பல காலம் தள்ளிப்போட்ட வேலைகளை இன்று முடிப்பீர்கள்.

**துலாம்**
இளைஞர்களுக்கு நன்மை உண்டு. கவலை தீரும். பணத்தை கையாளும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆராய்ச்சி மனப்பான்மை வரும். பேச்சாற்றல் கூடும்.

**விருட்சிகம்**
நண்பர்களை அனுசரித்து செல்வது மிகவும் நல்லது. எதிர்பாராத செலவு வரும். ஆனாலும் மன வருத்தம் அடைய மாட்டீர்கள். குழந்தைகளின் வாழ்வில் குதூகலம் நிறையும். மகிழ்ச்சி கூடும்.

**தனுசு**
சமூக வலைதளங்களில் கவனமாக இருங்கள். வம்பு பேச வேண்டாம். புதியவர்களுடன் பேச்சைக் குறைத்துக் கொள்ளுங்கள். திட்டமிட்ட பயணம் தள்ளிப்போகும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**மகரம்**
புதிய நண்பருடன் விழிப்புடன் பழகுவது நல்லது. குழந்தைகளாலும், வாழ்க்கைத்துணையாலும் நலம் உண்டாகும். ஜீரணம் சம்பந்தப்பட்ட ஆரோக்கியக் குறைபாடு வரக்கூடும்.

**கும்பம்**
உடற்பயிற்சியில் அதிக கவனம் செலுத்துவீர்கள். குடும்ப நலம் சீராகும். உங்களின் உழைப்பு வீண் போகாது. வியாபாரத்தில் கூட்டாளிகள் நன்கு ஒத்துழைப்பார்கள்.

**மீனம்**
வெளியூர், வெளிநாட்டுத் தொடர்பு மூலம் ஆதாயம் கிடைக்கும். உங்களின் மதிப்பு உயரும். இன்று சுபநிகழ்ச்சி நிகழும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பண வரவு அதிகரிக்கும்.

# தி.மு.க.வில் இருந்து 51 பேர் தற்காலிக நீக்கம்



சென்னை, பெப். 16

திமுகவில் இருந்து 51 பேர் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் துரை முருகன் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் வரும் 19 ஆம் திகதி நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதையடுத்து அரசியல் கட்சியினர் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக பிரச்சாரங்கள் மேற்கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள்ளை எதிர்த்து போட்டியிடும் 51 பேர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், வரும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களை எதிர்த்தும், கூட்டணி கட்சி வேட்பாளர்களை எதிர்த்தும் போட்டியிட்ட 51 பேர் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த ஒழுங்கு நடவடிக்கையில் வேலூர் மத்திய மாவட்டத்தில் வேலூர் மாநகர், பள்ளிகொண்டா, ஒடுகத்தூர், பொன்னாத்தூர் பகுதிகளில் எதிர் வேட்பாளர்களாக போட்டியிட்டோர் நீக்கப்பட்டுள்ளனர்" எனத் தெரிவித்துள்ளார்.

# சட்டபேரவையை முடக்குவதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது

## முன்னாள் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்

காரைக்குடி, பெப். 16

சட்டப்பேரவையை முடக்குவதற்கான அதிகாரம் யாருக்கும் கிடையாது என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்தார்.

காரைக்குடி அருகே புதுவயல், கண்டனூர் பேரூராட்சியில் காங்கிரஸ், தி.மு.க. கூட்டணி வேட் பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் செய்த சிதம்பரம் பேசியதாவது:

"சட்டப்பேரவையை முடக்குவோம் என பேச்சளவில் சொல்லலாம். அரசியல் சாசனம் தெரியாதவர்கள்,



படிக்காதவர்கள் தான் இது போன்று பிதற்றுவர். சட்டப் பேரவையை முடக்கும் அதிகாரம் யாருக்கும் கிடையாது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் படி சட்டப்பேரவையை முடக்குவது எளிதான காரியமல்ல. மேலும் ஓபிஎஸ், இபிஎஸ் சட்டப் பேரவையை முடக்குவோம் என்றும், பா.ஜ.க. தலைவர் அண் ணாமலை 2024-ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேர வைக்கு தேர்தல் வரும், ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றும் பேசுவது அர்த்தமில்லாத பிதற்றல் பேச்சு.

முன்னாள் முதல்வர்கள் அர்த் தமில்லாமல் பேசக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

# ஸ்டாலின் வீட்டின் முன் போராட்டம்!

## பா.ஜ.க மாணவர் பிரிவினர் கைது



சென்னை, பெப். 16

தஞ்சை மாணவி லாவண்யா தற்கொலைக்கு நீதிக்கேட்டு, தமிழக முதல்வர் ஸ்டாலின் இல்லம் முன்பு போராடிய பா.ஜ.கவின் மாணவர் பிரிவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரியலூரைச் சேர்ந்த 12ஆம் வகுப்பு மாணவி லாவண்யா, தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே உள்ள மைக்கேல் பட்டியில் செயல்பட்டு வரும், கிறிஸ்தவ அமைப்புக்குச் சொந்தமான பள்ளியில் படித்து வந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் தற்கொலை செய்து கொண்டார்.

மாணவியின் மரணத்திற்கு மதமாற்றம் செய்ய சொன்னதுதான் காரணம் என பா.ஜ.க. குற்றம் சாட்டி வருகிறது. மேலும் மாணவியின் மரணத்திற்கு நீதிக்கேட்டு பா.ஜ.க. பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளது.

இந்தநிலையில், மாணவி லாவண்யாவின் மரணத்திற்கு நீதி கேட்டு, பாஜகவின் மாணவர் அமைப்பான ஏபிவிபி அமைப்பைச் சேர்ந்தவர்கள் நேற்று தமிழக முதல்வர் ஸ்டாலின் இல்லம் முன்பு அமர்ந்து போராட்டம் நடத்தினர். இதனையடுத்து அவர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

# எழுத்தாளர் பா.விசாலம் புதுச்சேரியில் காலமானார்

புதுச்சேரி, பெப். 16,

பிரபல தமிழ் எழுத்தாளர் பா.விசாலம் (89) புதுச்சேரியில் நேற்று முன்தினம் காலமானார்.

குமரி மாவட்டத்தில் பிறந்து புதுச்சேரியில் வாழ்ந்து வந்த எழுத்தாளர் பா.விசாலம் கணவர் ராஜூடன் இணைந்து கம்யூனிஸ்ட் கட்சியில் பணியாற்றி வந்தவர்.



ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ப.ஜீவானந்தம், பி.ராமமூர்த்தி, ஏ.கே.கோபாலன், வி.பி.சிந்தன், எம்.ஆர்.வெங்கட்ராமன் ஆகியோரோடு பணியாற்றியுள்ளார்.

மாதர் சங்கத்தில் தீவிரமாக செயல்பட்ட பா.விசாலம், 1960-களில் எழுத்தாளர் சுந்தரராமசாமியின் வழிகாட்டுதலின்பேரில் 'சரஸ்வதி' பத்திரிகையில் சிறுகதை எழுதினார். 1990-களில்அவரது சுய வரலாற்று நாவலான 'மெல்லக் கனவாய் பழங் கதையாய்' என்ற நூலும், 2001இல் 'உண்மை ஒளிர்க என்று பாடுவோம்' என்ற இவரது நாவலும் தமிழ் இலக்கிய உலகில் பெரிதும் பேசப்பட்டவை.

இவரது கணவர் 2018-ல் காலமான பின்பு, புதுச்சேரி தாகூர் நகரில் தனது மகள் சித்ராவுடன் வசித்து வந்த விசாலம், உடல்நலம் பாதிக்கப்பட்டு காலமானார்.



# மூன்று மோட்டார் சைக்கிள்கள் வவுனியாவில் மோதி விபத்து!

## இளைஞன் உயிரிழப்பு

வவுனியா, பெப். 16

வவுனியா, மரக்காரம்பளை வீதியில் மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர் என நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் இந்த மோட்டார் சைக்கிள் விபத்து இடம்பெற்றது.

வவுனியா, கணேசபுரம் பகுதியிலிருந்து மரக்காரம்பளை வீதியூடாக பெண்ணொருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் எதிர்ப்பக்கத்தில் உள்ள ஒழுங்கை ஒன்றுக்குள் திரும்ப முற்பட்டுள்ளது. இதன்போது எதிர்த்திசையில் வந்த பல்சர் ரக மோட்டார் சைக்கிள், பெண் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து பிறிதொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் பல்சர் ரக மோட்டார் சைக்கிளின் சாரதியான பண்டாரிக்குளம், அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 32 வயதுடைய சிறிரஞ்சன் என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றைய இரு மோட்டார் சைக்கிளின் சாரதிகளும் காயமடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

# ஊழியர் சேமலாப நிதியத்தில் ஒருபோதும் கைவைக்காது அரசு

## நிதி அமைச்சர் பஸில் உறுதி

கொழும்பு, பெப். 16

**2000 மில்லியன் ரூபாவை விட அதிகமான வரி வருமானத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நபர்கள் மீது விதிக்கப்பட்ட 25 சதவீத மிகை வரிக்கு ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்கள் உள்ளடங்காது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நிதி அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கருத்து தெரிவிக்கையில்,

2022 வரவு-செலவு திட்ட யோசனையை சமர்ப்பித்து என்னால் மேற்கொள்ளப்பட்ட வரவு-செலவு திட்ட உரையின் 68 ஆவது பக்க 7.9 இல் ஒரு முறை மாத்திரம் அறவிடப்படும் வரி யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டது. அதில் 2000 மில்லியனை விட அதிக வரி வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனங்கள் மற்றும் நபர்களின் மீது சுமத்தப்படும் 25 சதவீத மிகை வரி குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வரி ஊடாக சுமார் 100 பில்லியன் ரூபாயை ஈட்ட எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறுதான் 68 ஆம் பக்கத்தில் உள்ளது. அதன்படி, 69 பேரை இனங்கண்டிருந்தோம். இவர்களிடம் இருந்து 105 பில்லியன் வரி வருமானம் கிடைக்கும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உள்ளிட்ட 11 நிதியங்களை இதில் உள்ளடக்க நாம் எப்போதும் எதிர்பார்க்கவில்லை. அதை நாங்கள் திட்டமிடவே இல்லை. எனினும் கடந்த அரசாங்கத்தின் 2017 இலக்கம் 24 உள்நாட்டு வருமான சட்டத்தில் இந்த 11 நிதியங்களும் வரி அறிவிடவேண்டிய நிறுவனங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்த மிகை வரிக்கு குறித்த நிதியங்களும் உள்ளடங்கும் என பொது மக்கள் மத்தியில் கருத்து பரவியுள்ளது. இதனை நாம் அமைச்சரவையில் விளக்கப்படுத்தி குறித்த 11 நிதியங்களையும் இந்த வரியில் இருந்து விடுவிக்கவேண்டும்-என்றார். (அ)



# இலங்கைக்கு 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வது குறித்து ஆராய்வு

கொழும்பு, பெப். 16

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் பிரச்னை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, எதிர்வரும் காலத்தில் பொதுப் போக்குவரத்துக்காக 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் ஆராயப்பட்டது.

முந்தைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின்போது கொள்வனவுக்கான கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் இறக்குமதி செய்யப்பட்ட ரயில் பெட்டிகளின் தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்து, அவற்றை உடனடியாகப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, உரிய அதிகாரிகளுக்கு இதன்போது ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்து, போக்குவரத்து ஒழுங்குபடுத்தல், பஸ் சேவைகள், ரயில்வே மற்றும் மோட்டார் தொழிற்றுறை அமைச்சுக்களின் முன்னேற்ற ஆய்வுக் கூட்டம், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றபோதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின்போது, 160 ரயில் பெட்டிகளுக்கான கொள்வனவுக் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் 120 ரயில் பெட்டிகள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும், அவற்றில் 40 பெட்டிகள் மாத்திரமே போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்படாத ஏனைய பெட்டிகளை உடனடியாகச் சேவையில் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு, இக்கூட்டத்தின்போது ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

போக்குவரத்துச் சேவையில் இணைக்கக்கூடிய வகையில் இருப்பினும் சேவைக்குப் பயன்படுத்தப்படாதுள்ள பஸ்களைப் பழுதுபார்த்து, குறுந்தூரச் சேவைகளுக்குப் பயன்படுத்துமாறும் அதன் மூலம், கிராமிய மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிட்டுமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அனைத்துத் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களுடன் நட்புணர்வுடன் பணியாற்றுவதன் மூலம், போக்குவரத்துக் கட்டமைப்பிலுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்றும் ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி , மக்களை ஒடுக்கும் தொழிற்சங்கப் போராட்டங்களை நிறுத்துவதற்கு, அனைத்துத் தரப்பினரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் எடுத்துரைத்தார்.

போக்குவரத்துச் சேவையை முறையாகக் கொண்டுசெல்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். தொழில்நுட்பம் மற்றும் விதிமுறைகளை நெறிப்படுத்துவதன் மூலம் பல சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள முடியும்.

அதேபோன்று, உல்லாசப் பயணிகளை இலக்குவைத்து, சுற்றுலாப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் பயணிகள் சேவையை முன்னெடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போது சேவையில் அதிகப்படியான ஊழியர்கள் காணப்படுவது பாரிய பிரச்னையாக உள்ளதென்று அதிகாரிகள் எடுத்துரைத்தபோது, எந்தவோர் ஊழியரையும் பணி நீக்கம் செய்யாது, உரிய பயிற்சிகளை வழங்கி, அவர்களிடமிருந்து அதிகபட்ச சேவையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான முறைமையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறும், ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எரிபொருள் பிரச்னை மற்றும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி, எதிர்வரும் காலத்தில் பொதுப் போக்குவரத்துக்காக 100 மின்சார பஸ்களை இறக்குமதி செய்வதற்குள்ள இயலுமை தொடர்பிலும், இதன்போது நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

போக்குவரத்துச் சேவை தொடர்பில் பொதுமக்களின் குற்றச்சாட்டுகள் குறித்து அவதானம் செலுத்தி, தரமான போக்குவரத்துச்சேவையை வழங்குவதற்கு அனைவரும் உழைக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (அ)

# 1 லட்சத்து 15,867 பேருக்கே கோதுமை மா நிவாரணம்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 16

பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 867 பேருக்கு சலுகை விலையில் 15 கிலோ கோதுமை மா வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் விளக்கமளித்த வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன,

தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மாவை மானிய விலையில் வழங்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு, பாவனையாளர் விவகார அமைச்சு, வர்த்தகத்துறை அமைச்சு ஆகியன இணைந்து இந்தத் திட்டத்தை தயாரித்துள்ளன. தற்போது சந்தையில் கோதுமை மா கிலோ ஒன்று 120 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. எனினும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 80 ரூபாவுக்கு கோதுமை மாவை வழங்க இந்தத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 15 கிலோ கோதுமை மாவை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ச.தொ.ச. விற்பனை நிலையங்கள் மூலம் வீடுகளுக்கே கோதுமை மாவை விநியோகிக்கும் வகையில் இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# வாகன இறக்குமதி தடையை மீறி சொகுசுக் கார்கள் இறக்குமதியா?

கொழும்பு, பெப். 16

வாகன இறக்குமதிக்கான தடையை மீறி எந்த வாகனங்களும் இறக்குமதி செய்யப்படவில்லை என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலை ஊடாக இரண்டு கார்டிலக் எஸ்கலேட் சொகுசுக் கார்களை கனரக வாகனம் ஒன்று ஏற்றிச் சென்ற காணொளி சமூக ஊடகங்களில் பரவியது.

இந்நிலையில் இது குறித்து விளக்கமளிக்கும்போதே சுங்க பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சுதத்த சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேற்படி வாகனங்கள் கடுவெலயில் உள்ள முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கை வாகனப் பழுதுபார்க்கும் தொழிற்சாலையால் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக கொண்டுசெல்லப்பட்டதாக அவர் கூறினார். (அ)

# தண்ணீர் போத்தலின் விலை ரூ. 19 மட்டுமே!

*வெற்று போத்தலை வழங்கினால் 10 ரூபா*



*கொழும்பு, பெப். 16*

500 மில்லிலீற்றர் தண்ணீர் போத்தல் ஒன்றை 19 ரூபா செலவில் அனைத்து ச.தொ.ச விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

தற்போது 500 மில்லிலீற்றர் தண்ணீர் போத்தல் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன், தண்ணீரைப் பயன்படுத்திய பின்னர் வெற்றுப் போத்தல் வீசப்படுகிறது. இதனால் சூழலுக்கு மாசு ஏற்படுத்துகிறது. எனவே, சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத, மீள் சுழற்ச்சி செய்யக்கூடிய புதிய போத்தல்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இதன் அறிமுக விலையாக 6 ரூபா கழிவு வழங்கப்படுகிறது. 29 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளும் தண்ணீர் போத்தல்களைப் பயன்படுத்திவிட்டு, போத்தல்களை சதொசவிடம் மீள ஒப்படைக்கப்படும் பட்சத்தில் 10 ரூபா பெற்றுக்கொள்ள முடியும். எனவே, 19 ரூபாவுக்கு 500 மில்லிலீற்றர் தண்ணீர் போத்தல் ஒன்றை ச.தொ.ச. விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தை விரைவில் முழு அளவில் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்-என்றார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தத் தகவல்களை வெளியிட்டார். (அ)

# ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவும் தயார்!

*அறிவிப்பு விடுத்தது ஐக்கிய மக்கள் சக்தி*

கொழும்பு, பெப். 16

**அரசு, ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால்கூட அதனை எதிர்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சி தயாராகவே இருக்கின்றது. எனவே, தேர்தலை பிற்போடாமல் உரிய காலத்தில் நடத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

எந்நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆக, முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசுக்கு நாம் சவால் விடுக்கின்றோம். தேர்தலை சந்திக்க அச்சமில்லையெனில் எதற்காக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்



ஒத்திவைக்கப்படவேண்டும்.

அதேபோல சிறு சட்டத்திருத்தம் ஊடாக மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம். அதையும் அரசு செய்யாமல் இருப்பது ஏன்? அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை ஜனாதிபதிக்கு நடத்த முடியும். அவ்வாறு நடத்தப்பட்டால் அந்த தேர்தல்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு இல்லை. கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அரசுக்கு எதிரான ஆட்டத்தை ஓரணியாகவே எதிர்கொள்வோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவே எமது ஜனாதிபதி வேட்பாளர்-என்றார். (அ)

# சகல அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

*24 ஆம் திகதி முக்கிய சந்திப்பு*

*கொழும்பு, பெப். 16*

தேர்தல் முறைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 24 ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என தெரியவருகின்றது.

அடுத்த தேர்தலை எந்த முறைமையின்கீழ் நடத்துவது என்பது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு, தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இந்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் இலங்கைக்கு வழங்கியது இந்தியா!

*கொழும்பு, பெப். 16*

இந்திய நிறுவனமான ஐ.ஓ.சியால் வழங்கப்பட்ட 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே நேற்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் கையளித்தார்.

இது குறித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டுள்ள இந்திய தூதரகம், இந்தியா இலங்கையின் அர்ப்பணிப்புள்ள பங்காளி மற்றும் உண்மையான நண்பனாக செயற்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான இந்திய-இலங்கை ஒத்துழைப்பு தொடரும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாதாள குழு உறுப்பினர் பரிப்புவா நேற்று கைது!

*கொழும்பு, பெப். 16*

திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவரும் மற்றும் போதைப்பொருள் வியாபாரியுமான "பரிப்புவா" என்றழைக்கப்படும் மானவடுகே அசங்க மதுரங்க என்பவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய நேற்று முன் தினம் இரவு கோன்கடவல பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

அவரை கைதுசெய்வதற்கு முன்னர் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சந்தேகநபரிடமிருந்து கைகுண்டொன்றும் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளுக்காக சந்தேகநபர் அம்பன்பொல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# உக்ரைனில் உள்ள இலங்கையர் கண்காணிக்கும் இலங்கை அரசு

*கொழும்பு, பெப். 16*

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுக்கலாம் என்ற அச்சம் நிலவிவரும் நிலையில் அங்கு வசிக்கும் இலங்கையர்களின் நிலைமையை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக இலங்கை வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. ஏதேனும் அவசரநிலை ஏற்பட்டால் இலங்கை பிரஜைகளை வெளியேற்றுவது உட்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. ஏழு மாணவர்கள் உட்பட 40 இலங்கையர்கள் உக்ரைனில் வசிப்பதாக வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்து; 78 வீத கழிவுகள் அகற்றப்பட்டன

*கொழும்பு, பெப். 16*

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து கடலில் வீழ்ந்த மோசமான கழிபொருட்களில் 78 வீதமானவை அகற்றப்பட்டுள்ளதாக இலங்கையின் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கூறியுள்ளது.

மீட்பு நடவடிக்கைக்கு பொறுப்பான அமெரிக்காவை தளமாகக் கொண்ட நிறுவனம் இந்த தகவலை வழங்கியுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கூறியுள்ளார்.

இதேவேளை, எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அழிவை அடுத்து கடலில் வீழ்ந்துள்ள கழிபொருட்களை அகற்றுவதற்காக சீன நிறுவனமொன்றுக்கு சொந்தமான இரண்டு கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்கு வந்துள்ளன. சேதமடைந்த பொருட்களை அகற்றுவதற்கான திட்டத்தை தயாரிப்பதற்காக இந்த இரண்டு கப்பல்களாலும் பூர்வாங்க பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதேவேளை, மே மாதத்துக்குள் தமது பணிகள் அனைத்தும் நிறைவடையும் என சீன நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கோப் குழுவில் முன்னிலையாகுமாறு மேலும் சில நிறுவனங்களுக்கு அழைப்பு

*கொழும்பு, பெப். 16*

எதிர்வரும் நாட்களில் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் மேலும் சில அரசாங்க நிறுவனங்கள் அழைக்கப்பட்டுள்ளன.

கடந்த கூட்டத்தொடரில் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த நிறுவனங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

இதற்கமைய எதிர்வரும் பெப்ரவரி 23 ஆம் திகதி புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகமும், பெப்ரவரி 24 ஆம் திகதி இலங்கை தரநிர்ணய கட்டளைகள் நிறுவனமும் அழைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், அபிவிருத்தி லொத்தர் சபை மார்ச் 10 ஆம் திகதியும், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மார்ச் 11 ஆம் திகதியும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டுள்ளன.

மார்ச் 23 ஆம் திகதி அரச ஈட்டு முதலீட்டு வங்கியும், மார்ச் 24ஆம் திகதி ஏற்றுமதி அபிவிருத்தி சபையும், மார்ச் 25 ஆம் திகதி மக்கள் வங்கியும் அழைக்கப்பட்டுள்ளன.

கோப் குழுவின் புதிய தலைவராக பேராசிரியர் சரித ஹேரத் மீண்டும் தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சரத் பொன்சேகாவை தாக்க முயற்சித்த அமைச்சர் சமல்!

*திஸ்ஸ குட்டியாராச்சி தகவல்*

*கொழும்பு, பெப். 16*

அமைச்சர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை தாக்க முயற்சித்தார் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் தான் உள்ளிட்ட சிலர் இடையில் சென்று அவரை காபாற்றியதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அன்று தப்பியோடிய சரத் பொன்சேகா இன்று வீரரை போன்று கருத்து வெளியிடுவதாகவும் அவர் கூறினார்.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் விகாராதிபதிகளை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

# அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்கத் தயார்



கொழும்பு, பெப். 16

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்கத் தயார் என நிதி அமைச்சர் பஸில் ராஜ பக்ஷ தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களை வழங்குவது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

பால்மா, எரிவாயு, கோதுமை மா, சிமெந்து போன்றவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும், ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் போதுமான அளவு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்கள் சந்தைக்கு தட்டுப்பாடு இன்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்குத் தேவையான தீர்வுகளை வழங்க ஜனாதிபதியினால் குறித்த குழு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டமா அதிபரும் அரச ஊழியரே அவர் அரசின் கைக்கூலி அல்லர்!

## கடுமையாக சாடினார் பேராயர் மல்கம்



கொழும்பு, பெப். 16

**அரசாங்கத்தின் சதிச் செயலை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

**மக்களை மிரட்டி உண்மைகளை நசுக்கும் முயற்சிகளுக்கு உரிய நேரத்தில் மக்கள் பதிலளிக்கவேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.**

கைது தொடர்பான விடயத்தை சிவில் செயற்பாட்டாளர் ஷெஹான் மாலக்க வெளிப்படுத்தி இருக்கவிட்டால் அவர் வெள்ளை வானில் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டதை நாடு ஒருபோதும் அறிந்திருக்காது என்றும் பேராயர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களை கைது செய்வதில் பொலிஸாரின் நடத்தை குறித்து கடுமையாக சாடிய கொழும்பு பேராயர், ஷெஹான் மாலக்கவின் கைது பட்டப்பகலில் நடந்த கடத்தல் என்றும் குற்றம் சாட்டினார்.

இத்தகைய செயற்பாடுகள் நாகரீகமற்றது மற்றும் ஒழுக்கக்கேடானது என குறிப்பிட்ட பேராயர், சட்டமா அதிபரும் அரச ஊழியரே அன்றி அரச கைக்கூலி அல்லர் என்றும் சாடினார்.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த சட்டமா அதிபர் கடமைப்பட்டுள்ளார். ஆனால் பயங்கரவாத தாக்குதல்களுக்கு நீதி கோரி குரல் கொடுப்பவர்களை கைது செய்வதற்கான முயற்சிகளை சட்டமா அதிபர் மேற்கொண்டு வருகிறார் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் பிரச்சனைகளை தீர்க்க முடியாவிட்டால், சர்வதேசத்திடம் சென்று தீர்வை பெற்றுக்கொள்ள தயங்கமாட்டேன் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார். (அ)

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

# சிவில்மேன்முறையீட்டுநீதிமன்றை நாடினார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, பெப். 16

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவிக்குமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் மீது வெளிப்படையாக விமர்சனத்தை முன் வைத்து வந்தார்.



இந்நிலையில் குறித்த தாக்குதல் சம்பவத்துக்கு பொறுப்பு கூறவேண்டிய சிறிசேனவை அரசாங்கம் காப்பாற்றுகின்றதா என ஆளும்கட்சி உறுப்பினர்கள் சிலர் கேள்வியெழுப்பியுள்ளனர்.

அத்தோடு ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் கொழும்பு பேராயரும் முன்னாள் ஜனாதிபதியை விசாரிக்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தார். (அ)

# ரூபவாஹினி கூட்டுத்தாபன பணிப்பாளர் இராஜினாமா!

கொழும்பு, பெப். 16

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி ஹீன் கெந்த பதவி விலகியுள்ளார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக நிர்வாக சேவையில் உயர் அதிகாரி ஒருவரை நியமிப்பது குறித்து பரிசீலனையில் உள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

ஊடகங்கள் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட்ட வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாக, ஜயம்பதி ஹீன்கெந்த குறித்த பதவியிலிருந்த விலகியுள்ளார் என தெரியவருகிறது. (அ)

# ஷெஹான் மாலக்க பிணையில் விடுதலை

கொழும்பு, பெப். 16

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட சமூக ஆர்வலர் ஷெஹான்மாலக்க கமகே மாளிகாகந்த நீதவான் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய நேற்று முன்தினம் பாணந்துறையில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

ஷெஹான் மாலக்க கடந்த ஆண்டு ஊடகவியலாளர் சந்திப்பின்போது, ஈஸ்டர் தாக்குதல் ஓர் அரசியல் சதி என்று கூறியதாகவும், அது குறித்து விசாரணை நடத்துமாறு அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும் கூறப்படுகிறது.

# ஊடகங்களுக்கு எதிரான சக்திகள் தொடர்ந்தும் சுதந்திர நடமாட்டம்

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

கொழும்பு, பெப். 16

ஊடகவியலாளர் சமுதித்தவின் வீட்டின் மீதான தாக்குதல், ஊடக துறைக்கு இழைக்கப்பட்ட தாக்குதல் தொடர்பான நீண்ட பட்டியலில் இன்னுமொரு சம்பவம் போன்று அமையக்கூடாது என சுதந்திர ஊடக இயக்கம் வலியுறுத்தியுள்ளது.

ஹிரு தொலைக்காட்சி அலைவரிசையில், பத்திரிகை விவரண நிகழ்ச்சி மற்றும் அரசியல் உரையாடல் நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்து வரும் ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட கல், தடி மற்றும் மலம் போன்றவைகளை கொண்டு நிகழ்த்தப்பட்ட இந்தத் தாக்குதலானது, வெட்கமற்ற மற்றும் பாரதூரமான சம்பவம் எனக் கருதும் சுதந்திர ஊடக இயக்கம் இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது.

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவுக்கு இதற்கு முன்னரும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள சுதந்திர ஊடக இயக்கம், அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பு எனவும் வலியுறுத்தியுள்ளது.

பல தடவைகள் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகத் ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரம தெரிவித்துள்ளார். தாக்குதல் மேற்கொள்ளவந்த இனந்தெரியாத நபர்கள் சமுதித்தவின் வீடு அமைந்துள்ள வீட்டு வளாகத்தின் பாதுகாப்பு அதிகாரியின் தலையில் துப்பாக்கியை வைத்து அவரை மிரட்டியுள்ளனர்.

மக்கள் செறிந்து வாழும் இப்பகுதியில் வெள்ளை வானில் வந்த நான்கு ஆயுததாரிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இது போன்ற பிரதேசங்களில் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்படுவது சாதாரண விடயம் என்பதனால் இலங்கை பொலிஸ் இது தொடர்பில் கரிசனை செலுத்துமாயின் விரைவாக விசாரணை நடத்தி குறித்த இனம்தெரியாத குண்டர்களைக் கைது செய்து சட்டத்தை அமுல்படுத்த முடியும் எனச் சுதந்திர ஊடக இயக்கம் நம்புகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர், கறுப்பு ஜனவரி நினைவேந்தலின்போது, பல தசாப்தங்களாகப் படுகொலை செய்யப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்குமாறு தமது அமைப்பு உட்பட ஊடக சமூகம் கோரிக்கை விடுத்ததாகச் சுதந்திர ஊடக இயக்கம் இங்கு சுட்டிக்காட்டியுள்ளது.

சட்ட பலவீனங்கள் மற்றும் அரசியல் செல்வாக்கு காரணமாக அநேகமாக அனைத்து சம்பவங்களுக்கும் பொறுப்பானவர்கள் தண்டனையிலிருந்து விலக்கு பெற்றுள்ள நிலையில், சமுதித்த தொடர்பான சம்பவமும் அந்தப் பட்டியலில் மற்றுமொரு புதிய இலக்கமாகவே காணப்படும் என சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# போராட்டக்காரர்களின் மீது தாக்குதல் நடத்த வேண்டாம்

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, பெப். 16

போராட்டக்காரர்கள் மற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகிக்கவேண்டாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.

எவருக்கும் எந்த வகையிலும் எதிர்ப்பு தெரிவிக்க அனுமதி வழங்கவேண்டும் எனவும் இது தொடர்பில் மக்கள் தீர்மானம் எடுப்பார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

போராட்டக்காரர்கள் மற்றும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிஸார் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்தை கவனத்தில் எடுத்த ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை யானால் தொடர்ந்தும் வேலை நிறுத்தம் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர அமைச்சரவைக் கூட்டத்தில் கூறினார். (அ)

# கல்வியில் காலனித்துவ நீக்கம்



**ஹர்ஷன ரம்புக்வெல்ல**

காலனித்துவத்திற்குப் பிற்பட்ட சமூகங்களைப் பொறுத்த வரையில் காலனித்துவ நீக்கத்தில் பாரிய பங்கு வகிப்பது கல்வியாகும். மாறாக காலனித்துவம் உண்டாவதிலும் கல்வியின் பங்கு பெரியதாகையால் இது எதேர்ச்சியான ஒரு விடயம் அல்ல. கல்வியை மீள் வடிவமைப்பதில் காலனித்துவ நீக்கத்தை நாம் நாடுகின்றோம். இதன் போது அறிவுசார் தளர்ச்சியை உண்டாக்கக் கூடிய குறுகிய நோக்கத்தைக் கொண்ட பிறப்பிடம் சார் கொள்கைகளின்பால் நாம் செல்வதற்கான சாத்தியக்கூறு அதிகம்.

காலனித்துவத்தினடிப்படையில் பின்தங்கிய சமூகங்களை நவீனமயப்படுத்துவதற்குக் கல்வியைப் பயன்படுத்துவது தொடர்பாக தோமஸ் மக்கோலே போன்ற கொள்கையமைப்பாளர்கள் வலுவான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். மக்கோலே குறிப்பாக வடமொழி மற்றும் ஆங்கில வழிக் கல்வி தொடர்பாகக் கொண்டிருந்த பின்வரும் கருத்து பிரபலமானது. அதாவது ஐரோப்பிய புத்தகசாலையின் ஒரு தனிப் புத்தக அடுக்கு கொண்டிருக்கும் அறிவுசார் விடயங்கள் சமஸ்கிருதம் போன்ற உள்நாட்டு மொழிவழிக் கல்வியின் தொகுப்பிலும் பார்க்க அதிகமானது என அவர் குறிப்பிடுகின்றார்.

சமூகத்தை நவீனமயப்படுத்துவதில் ஆங்கில வழிக் கல்வியின் தேவை தொடர்பாக இதனை ஒத்த கண்ணோட்டம் இலங்கையிலும் காணப்படுகின்றது. காலனித்துவத்தின் கீழிருந்த இலங்கையில் ஆங்கில மொழி மூலமான கல்வி சில உயர் நிலைப் பாடசாலைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பினும் 1831இல் கோல்புறூக்-கமரன் சீர்திருத்தம் மேற்கொண்டிருந்த கல்வி ரீதியான கொள்கை மாற்றங்கள் நவீனமயமாக்கலுக்கு இன்றியமையாதவையாக இருந்தன என ஜி. சி. மெண்டிஸ் போன்ற வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். எனினும் 1950 களிலேயே மெண்டிஸ் அவர்கள் இவ்வாறு எழுதியிருப்பது, காலனித்துவக் கல்வியானது எமது சமூகத்தில் எந்த அளவு ஊடுருவியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

காலனித்துவக் கொள்கைகள் சமூகத்தில் மேலைத்தேய வழக்கங்களைப் பின்பற்றும் “உயர் வர்க்கத்தினரை” அல்லது “சாகிப்புக்களை” உருவாக்கியுள்ளதால் ”மக்கோலேயின் பிள்ளைகள்” என்ற கூற்று இங்கு பொருத்தமானது. ஆகவே காலனித்துவத்திலிருந்து விடுபடுகையில், “மனதின் காலனித்துவ நீக்கம்” என்பது அவசியமாகின்றது என குகி வா“ தியோங்கோ என்ற கென்ய எழுத்தாளர் கருதுகின்றார். கல்வியை மறுசீரமைத்தலும், காலனித்துவ நீக்கமும் இன்று பல காரணங்களுக்காக அவசியமாகின்றன. காலனித்துவம் இல்லாத போதும் உலகளாவிய ரீதியில் அறிவு உற்பத்தியில் காணப்படும் சமத்துவமின்மையால் காலனித்துவ நீக்கத்தின் தொடர்ச்சிக்குக் கல்வியாளர்கள் முன்னுரிமை வழங்குகின்றனர். பல கல்விசார் கற்கை நெறிகளில் பாடத்திட்டம், பாட உள்ளடக்கம், மதிப்பீடுகள் போன்றவை “அறிவுற்பத்தி மையங்களால்” வகுக்கப்படுவதுடன் அவை உலகத்தின் வட மற்றும் தென் பகுதிகளின் பிரிவையும் ஒத்துக் காணப்படுகின்றன.

காலனித்துவ நீக்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டிய அதே சமயம் இதன் மீது ஒருமையாகக் கவனம் செலுத்துவது குறுகிய சிந்தனையுடைய பிறப்பிடக் கொள்கைசார் தேசியவாதிகளை உருவாக்கக் கூடிய ஒரு விடயமாகும். 1950 களிலிருந்து இலங்கையில் காலனித்துவ நீக்கம் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இதன் அரசியல் மற்றும் கொள்கை ரீதியான வெளிப்பாடாக “சிங்களம் மட்டும்” என்ற சட்டத்தைக் கருதலாம். உள்நாட்டு மொழிகள் மேம்படுத்தப்படுவதுடன் ஆங்கிலத்துக்கு வழங்கியிருக்கும் அதியுயர் முக்கியத்துவமானது குறைக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து முரண்பாடுகள் பெரிதும் இல்லாத போதும் இக் கொள்கையால் முக்கிய பாதக விளைவுகள் இரண்டும் காணப்படுகின்றன.

ஒரு பக்கம் அரசியல் சமயோசிதத்தால் தமிழ் மொழிக்கு உத்தியோகபூர்வ நிலை அளிக்கப்படாமையும் அதனால் அரைத் தசாப்தத்திற்கும் மேலாக இனமத அரசியல் மீது ஏற்பட்ட தாக்கமும் காணப்படுகின்றன. மறுபுறம் சிங்களம் உத்தியோகபூர்வ மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போதும் ஆங்கிலத்திற்குத் தொடர்ந்தும் சிறப்புரிமை காணப்படுவதோடு இன்றும் ஆங்கிலமானது சமூக மற்றும் கலாசார மூலதனமாகக் கருதப்படும் தன்மை நிலவுகின்றது. இதே சமயம் எமது கல்வி முறை பற்றிய விமர்சனங்கள் சிங்கள தேசியவாத சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படுகின்றன. சுய- அந்நியமான நபர்களை உருவாக்கும் இடங்களாகப் பல்கலைக்கழகங்களை உருவகிக்கின்றனர் குணதாச அமரசேகர போன்ற அறிவாளர்கள். அதாவது மேலைத்தேய சிந்தனையைக் கொண்ட, தமது கலாசாரத்திற்குப் பொருந்தாதவர்களாக இவர்கள் கருதப்படுகின்றார்கள். இக் கருத்தானது மேற்குறிப்பிட்ட குகி வா “தியோங்கோவின் ”மனதின் காலனித்துவ நீக்கம்” என்பதற்கு ஒத்ததாகும். இவ்வாறான கருத்துகள் சிங்களக் கலந்துரையாடல்களில் முக்கிய பங்கு வகித்ததோடு 1970, 80 களில் அது “ஜாதிக சிந்தனய” அல்லது “தேசிய சிந்தனை” என்ற வடிவில் வெளிக்காட்டப்பட்டன. நலின் டி சில்வா போன்ற அறிவாளர்கள் இக் கலந்துரையாடல்களை விஞ்ஞானத் துறையிலும் முன்னெடுத்ததோடு விஞ்ஞான முறை என்பது தவறானதென்றும் உள்நாட்டு அறிவுசார் முறைகள் நாடப்பட வேண்டும் எனவும் கூறுகின்றனர்.

**இலங்கையைப் பொறுத்த வரையில் கல்வியிலோ எமது அமைப்பு முறைகளிலோ காலனித்துவ நீக்கம் பற்றிச் சிந்திக்கையில், காலனித்துவத்தின் விளைவாக உண்டாகிய கருத்துகளும், முறைகளும் முற்றாக நீக்கப்பட முடியாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்**

காலனித்துவ நீக்கம் என்ற அணுகுமுறையை நான் எதிர்க்கவில்லை. உலக அறிவுசார் படிநிலைகள் சில வகையான அறிவுகளைப் புறக்கணிக்கின்றன. அறிவு என்பது குறித்த ஒரு சமூகத்தையோ கலாசாரத்தையோ பேணுவதற்கான ஒரு கருவி என்பதை விட எமது சமூகங்களின் அறிவுசார் விடயங்கள் புறக்கணிக்கப்படுவதை நாம் உணர வேண்டும். இவை பற்றிய விமர்சனங்கள் ஆங்கிலம், விஞ்ஞானம், ஜனநாயகம் போன்ற மேலைத்தேய மரபுகள் எமது சமூகங்களில் நீண்ட, சிக்கலான வரலாறுகளைக் கொண்டவை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். சமூகத்தில் நியாயத்துக்கான போராட்டத்திலும், மக்களை ஊக்கப்படுத்துவதற்கும் இவை இன்றியமையாதவையாகின்றன. ஆகவே எமது கல்வி முறைகளில் காலனித்துவ நீக்கத்தை ஏற்படுத்துகையில் சில ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை நாம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். இவற்றை உள்நாட்டுத் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் அணுகுவது அவசியம்.

இங்கு காலனித்துவத்திற்கு முற்பட்ட “தூய” உள்நாட்டு அறிவுசார் விடயங்கள் தற்போதைய சமூக சிக்கல்களைத் தீர்க்கும் என்ற கருத்து தவறானது. உதாரணமாக ஆசிய நாடுகள் பலவற்றிலும் ஜனநாயகத்திற்கு மாறாக மத்திய ஆட்சி முறையே எமது சமூகங்களுக்குப் பொருத்தமானது என்ற கருத்து நிலவுகின்றது. அதன் பாதகமான பக்க விளைவுகளை இலங்கையும் இந்தியாவும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வாதிகாரத்தினூடாகத் தற்போது அனுபவித்து வருகின்றன. அதிசயமான COVID குணப்படுத் துதல்கள் முதல் “தூய” காலனித்துவத்திற்கு முந்தைய வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் வரை பல்வேறு வகையான பூர்வீக சிந்தனைகளின் எழுச்சியையும் நாங்கள் கண்டிருக்கிறோம்.

காலனித்துவ நீக்கத்தின் முக்கிய சிந்தனையாளரான ஃபிரான்ட்ஸ் ஃபனான், அவரது பாரம்பரிய உரையான ரெச்சட் ஒஃப் தி ஏர்த் “Wretched of the Earth” இல் கடந்த காலத்தின் மீதான இந்த கவர்ச்சியைப் பற்றியும் பல தேசியவாத சிந்தனையாளர்கள் கடந்த காலத்திற்குத் திரும்பி, அதில் சிக்கிக் கொள்வார்கள் எனவும் எச்சரித்தார். இலங்கையைப் பொறுத்த வரையில் கல்வியிலோ எமது அமைப்பு முறைகளிலோ காலனித்துவ நீக்கம் பற்றிச் சிந்திக்கையில், காலனித்துவத்தின் விளைவாக உண்டாகிய கருத்துகளும், முறைகளும் முற்றாக நீக்கப்பட முடியாது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். காலனித்துவம் எமக்களித்த மரபுகளைத் தர்க்க ரீதியாகச் சமகாலத்துக்கு ஏற்றவாறு அணுகுவதோடு அவற்றோடு ஒத்துவாழவும் பழகிக்கொள்ள வேண்டும்.

காலனித்துவ நீக்கம் என்பது சமகால நிலவுகையுடனான கடினமான போராட்டமேயொழிய ஒரு வெறும் உருவகம் அல்ல என்பதைப் புரிந்து கொள்வது இங்கு அவசியமாகின்றது.

▸ எழுத்தாளர் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில முதுகலைப் பட்டப்படிப்பு நிறுவனத்தின் இயக்குனரும் ஆங்கிலப் பேராசிரியருமாவார்.

▸ **மொழிபெயர்ப்பு: கோபிகா சிவகுமார்**

# 13 ஆவது திருத்தமும் தமிழ் அரசியல் சமூகமும்

## ஒரு யதார்த்த அணுகுமுறை -2

கலாநிதி நிர்மலா சந்திரகாசன்

**ஆளுநரின் வகிபாகம் இதுவரை மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு தடையாகவே இருந்திருக்கின்றது. எனவே, ஆளுநர் மாகாண சபைகளை செயற்படுத்துவதை தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களிடமே விட்டு விட்டு, தொடர்ந்து ஒரு தலைமைத்துவ அடையாளமாக மாத்திரம் செயற்படவேண்டும், இதுவும் 2016ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாராளுமன்ற உப குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

மாகாணத்துக்கான நிதியமும் ஆளுநரின் கீழேயே உள்ளது. ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் வரி விதிப்பு, வரி விலக்கு போன்றவற்றுக்கான சட்ட மூலங்களை மாகாண சபை நிறைவேற்ற முடியாது. 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்ட மத்திய அரசுக்கும் - மாகாணங்களுக்குமான உறவுகள் தொடர்பான பாராளுமன்ற உப குழுவின் அறிக்கையில் சுட்டிக் காட்டியதுபோன்று, அரசியல் யாப்பின் கட்டமைப்பானது, வரிவிதிப்புகளின் மூலம் நிதி திரட்டும் மாகாண அரசின் முயற்சிகளை கடுமையாக கட்டுப்படுத்துகின்றது. இதன் காரணமாகவே மாகாண சபைகள் தமது நிதித் தேவைகளுக்கு பெருமளவில் மத்திய அரசினது கொடுப்பனவுகளிலேயே தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முக்கியமாக திருத்தி வரையப்பட வேண்டிய மற்றொரு விடயம் நிர்வாக கட்டமைப்பு தொடர்பானதாகும். மாகாண சபைகளை திறனுடன் நிர்வகிப்பதற்கு நிதிகளின் மீதான கட்டுப்பாடுகள் மட்டும் போதாது. அதனுடன் நன்கு வரையறுக்கப்பட்ட திறன்களைக் கொண்ட நிர்வாக பிரிவுகளின் மீதான கட்டுப்பாடுகளும் அவசியமாகும். தற்பொழுது மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் என்போர் மத்திய அரசின் கீழேயே செயற்படுகின்றனர். இந்த உத்தியோகத்தர்கள் மாகாண சபைக்கு உட்பட்ட பிரதேசங்களிலேயே தமது நிர்வாக கடமைகளை புரிகின்றார்கள். ஆனால், இந்த உத்தியோகத்தர்கள்மீது மாகாண சபை நிர்வாகத்திற்கு எதுவித கட்டுப்பாடும் கிடையாது. உள்ளூராட்சி நிர்வாகங்கள் மாகாண சபைக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட நிரலின் மூலம், மாகாண சபை நிர்வாகத்தின் மேற்பார்வை, கட்டுப்பாட்டுக்குள் இருப்பினும் உள்ளூர் மட்டத்தில் அவை மத்திய அரசின் அங்கமாகவே செயற்படுகின்றன. மாகாண சபை நிர்வாகம் வினைத்திறனுடன் செயற்படுவதற்கு மாகாண அரசின் செயற்பாட்டு எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படல் வேண்டும். நடைமுறையில் மாகாண அரசிற்கென பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்ச்சியாக மத்திய அரசினால் அத்துமீறப்படுகின்றன. அதிகார பகிர்வு தொடர்பாக மத்திய அரசுக்கென ஒதுக்கப்பபட்ட நிரல் 2இல், 'எல்லா விடயங்களிலுமான தேசிய கொள்கைகள்' என்றே தலைப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான தலைப்பு, மாகாண சபைக்கென ஒதுக்கப்பட்ட விடயங்கள் உட்பட, சகல விடயங்களையும் மத்திய அரசே எடுத்துக்கொள்ள வழிவகுத்துள்ளது.

தேசிய கொள்கைகள் என்றால் என்ன? தேசிய தரம் என்பதை எவ்வாறு தீர்மானிப்பது? என்பதுபோன்ற விடயங்கள், அனைத்து மாகாணங்களினதும் பங்கேற்புடனான ஒரு செயல்முறையிலும், மத்திய அரசும் மாகாணங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பாராளுமன்றத்தினூடாக அவற்றைச் சட்டங்களாக்குவதன் முலமுமே சீராக்கப்படலாம். இந்த விடயம், 2006இல் நிபுணர்கள் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததாக கவனிக்கப்பட வேண்டிய விடயம், பகிரப்பட்ட அதிகாரங்கள் தொடர்பிலான பொது நிரலை முற்றாக நீக்கி, அந்த பட்டியலில் உள்ள விடயங்களில் மத்திய அரசுக்கு உரிய விடயங்கள் எவை, மாகாண அரசுக்கு உரியவை எவை என்பதை திட்டவட்டமாக வரையறுத்துக்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறான ஒரு சுருக்கமான கட்டுரையில் இந்த விடயங்கள் தொடர்பாக ஆழமாக அலசுவது சாத்தியமில்லை எனினும், மாகாண சபைகள் அர்த்தமுள்ள அதிகார பகிர்வுடன் செயற்படுவதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்களை அடையாளப்படுத்தியுள்ளேன். திருத்தப்படவேண்டிய விடயங்களில் சில பின்வருமாறு:

ஆளுநரின் வகிபாகம் இதுவரை மாகாண சபைகளின் செயற்பாடுகளுக்கு தடையாகவே இருந்திருக்கின்றது. எனவே, ஆளுநர் மாகாண சபைகளை செயற்படுத்துவதை தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களிடமே விட்டு விட்டு, தொடர்ந்து ஒரு தலைமைத்துவ அடையாளமாக மாத்திரம் செயற்பட வேண்டும், இதுவும் 2016ஆம் ஆண்டு கூட்டப்பட்ட பாராளுமன்ற உப குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஆளுநரின் அதிகாரங்களைச் சுருக்கும் வகையில் மாகாண சபை சட்டம் திருத்தப்படல் வேண்டும். மாகாண சபைகளின் வரி சேகரிக்கும் அதிகாரம் மேலும் வலுவாக்கப்படல் வேண்டும். மாகாண சபைகள் வெளி நாட்டு உதவிகளை நேரடியாக பெறுவதற்கான ஏற்பாடுகள் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் வெளிநாட்டு உதவிகளுடன் நடைபெறும் வேலைத்திட்டங்களை நிர்வகிக்கும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

இன்னுமொரு முக்கிய விடயம், மாகாண சபைகள் மக்களுக்கான சேவைகளை ஆற்றக்கூடிய வகையில் நிர்வாகம் மீள கட்டமைக்கப்படல் வேண்டும். இவ்வாறான நிர்வாக மீள் கட்டுமானம் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவகர்கள் போன்ற உத்தியோகத்தர்களை மாகாண நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதுடன் அவர்கள் மத்திய அரசின் வேலைகளையும் கவனிக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். மாகாணங்களுக்கென பகிரப்பட்ட நிரலில் உள்ளூராட்சி நிர்வாகமும் அடங்குகின்றது. ஆனால் இந்த ஏற்பாடு, நகர அபிவிருத்தி திணைக்களம், மகாவலி அதிகாரசபை போன்ற மத்திய அரசின் நிறுவனங்களால் பல வீனப்படுத்தப்படுகின்றது. எனவே, இவ்வாறான மத்திய அரசின் நிறுவனங்கள் மாகாணங்களில் செயற்படும்போது மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் ஆகியவற்றின் சம்மத்துடனும் இணைந்து செயற்படக்கூடிய வகையிலும் ஏற்பாடுகள் கட்டாயமாக்கப்படல் வேண்டும்.

சட்டம், ஒழுங்கு தொடர்பான விடயங்கள், 9ஆவது பிரிவில் உள்ள அநுபந்தம் 1 நிரல் 1இல் குறிப்பிட்டது போல, மாகாண சபைகள் கோரும் பட்சத்தில் மத்திய அரசிலிருந்து மாகாண சபைக்கு மாற்றப்படலாம். இதேபோன்ற ஓர் ஏற்பாடு ஐக்கிய இராச்சியத்தில், பொலிஸ் அதிகாரம் மத்தியில் இருந்தாலும் 2010 ஆம் ஆண்டு வடக்கு அயர்லாந்து சபை அதிகாரத்தை கோரியதன் அடிப்படையில், பொலிஸ் அதிகாரம் ஹில்ஸ்பரோ ஒப்பந்தத்தின் பிரகாரம் மத்தியிலிருந்து அயர்லாந்து சபைக்கு மாற்றப்பட்டது.

இவ்வாறான முறையில் பொலிஸ் அதிகாரம் மாற்றப்படும் வரையில் தற்காலிக ஏற்பாடாக வடக்கு கிழக்கில் பணிக்கு அமர்த்தப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்களில் குறித்த சத விகிதம் க. பொ. த சாதாரண தரம் தமிழில் சித்தியடைந்தவர்களை நியமிப்பதுபோன்ற ஏற்பாடுகள், இந்த மாகாணங்களில் பொலிசார் தமது கடமையை வினைத்திறனுடன் புரிவதற்கு உதவும். இதே போன்ற ஏற்பாடுகள் மத்திய மாகா ணத்திலும் செய்யப்படுவதன் மூலம் மலையக தமிழரும் பயனடைவர்.

இதேபோன்று, நில அதிகாரம் தொடர்பான அநுபந்தம் 2 முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும். இது, மாகாணங்களின் நிலம் தொடர்பான பாதுகாப்புக்கு அவசியமானதாகும். ஜனாதிபதியின் கட்டளையின் பெயரில் அரச காணிகள் பாவனைக்கு சுவீகரிக்கப்படுவதும் பகிர்ந்தளிக்கப்படுவதும் மாகாண சபைகளுடன் கலந்தாலோசித்தும், அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையிலேயுமே செய்யப்படல் வேண்டும். அநுபந்தம் 2இன் பிரகாரம் மூவின அங்கத்தவர்களையும் கொண்ட தேசிய காணி ஆணைக்குழு உடனடியாக அமைக்கப்படல் வேண்டும்.







தமிழ் கட்சிகள் இந்த சீர்திருத்தங்கள் தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவேண்டும் என்பதே எனது பரிந்துரையாகும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மற்றைய பங்காளரென்ற வகையில், 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும் என்றும், அதன் மூலமே தமிழ் பேசும் மக்களுக்கான அர்த்தமுள்ள அதிகார பரவலாக்கம் சாத்தியமாகுமென்றும், ஒப்பந்தத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின் சரித்திர பூர்வமான தாயகம் என்றும் இந்திய அரசு சட்ட பூர்வமாக வற்புறுத்தமுடியும்..

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கு அமைய இலங்கை அரசு காலதாமதமின்றி மாகாண சபை தேர்தல்களை நடாத்தி, சில வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ள மாகாண சபை நிறுவனங்களை செயற்பட வைத்தல் வேண்டும். மாகாண சபைகள் இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் பயனுள்ளதாக இருப்பதுடன், ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட மக்கள் சேவையை அனைத்து மக்களுக்கும் வழங்கும் நிறுவனமாகவும் இருக்கும்.

ஜனாதிபதி வரவுசெலவுத்திட்ட உரையின்போது, மக்களின் தேவைகளிலும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்தும்படி தமிழ் கட்சிகளுக்கு ஆலோசனை தெரிவித்திருந்ததை கவனித்திருந்தேன். இது, உண்மையான ஜனநாயகமும், மக்களின் பங்குபற்றுதலும் ஆலோசனைகளுமுடனான பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மூலோபாயங்களை வகுப்பதன் மூலமுமே சாத்தியமாகும். இது, மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் போன்றவற்றினூடாக அடிமட்ட மக்களின் பங்களிப்புடன் செய்யப்படுவதே அர்த்தமுள்ளதாகும். அவர்களுக்கே அவர்களது தேவைகள் நன்கு புரியும். கொழும்பிலிருந்து திட்டமிடும் நிர்வாகிகளுக்கு அடிமட்ட மக்களின் சூழ்நிலைகளோ, தேவைகளோ புரியாது.

எனது பார்வையில், தமிழ் பேசும் மக்களுக்கு பயனுள்ளதும் சேவை செய்யக் கூடியதுமான அதிகார பரவலாக்க அலகு மாகாண அலகே. இது, அவர்களது பாரம்பரிய பிரதேசத்தில் ஓரளவுக்கு சுயாதீனமாக செயற்பட உதவும். ஐக்கிய இராச்சியத்தில் ஒற்றை ஆட்சியின் கீழ் உள்ளது போன்ற தனித்துவமான இன அடையாளங்களைக்கொண்ட ஸ்கொட்லாந்து, வேல்ஸ், அயர்லாந்து ஆகியன 13ஆவது திருத்தத்திற்கு ஒத்ததான சட்டவாக்க சபைகளையே கொண்டிருக்கிறன. ஸ்கொட்லாந்தில் 'பாராளுமன்றம்' என்றே அழைக்கிறார்கள்.

நான் இந்த கட்டுரையில் பரிந்துரைத்துள்ள ஆளுநரின் அதிகாரங்கள், மாகாண சபைகளுக்கான நிதி வளங்களை ஏற்படுத்துதல், நிர்வாக கட்ட மைப்புகளை சீர்படுத்துதல் போன்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் அனைத்தும் பின்வரும் அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டவையே.

அவையாவன: 2006ஆம் ஆண்டு சர்வகட்சி மாநாட்டுக்கு ஆலோசனைகளை வழங்கிய நிபுணர் குழு அறிக்கை, 2010இல் தயாரிக்கப்பட்ட நகல் அரசியலமைப்பு. 2016ஆம் ஆண்டின் மத்திய - மாகாண உறவுகள் பற்றிய உப குழு அறிக்கை என்பவையாகும்.

இந்த சூழ்நிலையில் தற்போது பேசப்படும் புதிய அரசியல் யாப்பானது, ஏற்கனவே ஆராயப்பட்டுள்ள பரிந்துரைகளை உள்வாங்கிக்கொள்ளலாம். இது தொடர்பாக புதிதாக ஆலோசிக்கப்படவோ, கண்டுபிடிக்கப்படவோ தேவைகள் எதுவும் இல்லை.

என்னைப் பொறுத்தவரையில், மாகாண சபை முறைமை, அதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு தேவையான திருத்தங்களை செய்யுமிடத்து, வினைத்திறனுள்ளதாகவும் வெற்றிகரமாக செயற்படக்கூடியதாகவும் இருக்கும். இவ்வாறான மாற்றங்கள் செய்யப்படுவதற்கு பாரிய அரசியல் சட்ட மாற்றங்கள் அவசியமில்லை. இம் மாற்றங்கள் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடனேயே நிறைவேற்றப்படலாம். அத்துடன், நிர்வாக மாற்றங்களை 13ஆவது திருத்தத்தை பாவித்தே, ஜனாதிபதியின் வர்த்தமானி அறிக்கைகள் மூலம் அமுல்படுத்தலாம். ■

(கட்டுரையாளர் - 2006 நிபுணர்கள் குழு உறுப்பினரும், இக் குழுவின் பெரும்பான்மை அறிக்கையில் ஒப்பமிட்டவருமாவார் - அத்துடன், அண்மையில் கூட்டமைப்பின் சார்பில் அமெரிக்க இராஜாங் கத்திணைக்கள சந்திப்புக்களில் ஈடுபட்ட மூவர் அடங்கிய நிபுனர் குழுவிலும் ஒருவராவார்)


# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**23)** நான்கு பாடசாலைகள் 420 புத்தகங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டனர் எனின், ஒரு பாடசாலைக்குக் கிடைத்த புத்தகங்கள் எத்தனை?

..........................................................................................................

**24)** 


அருகிலுள்ள A பாத்திரத்திற்குள் B என்ற பாத்திரத்தினால் 3 தடவைகள் நீரூற்றப்பட்டன. எனின் மேலதிகமாக வெளியேறும் நீரின் அளவு யாது?

..........................................................................................................

**25)** தரப்பட்ட எண்கோலத்தை அவதானித்து இடைவெளியை நிரப்புக.

i) 1, 4, 9, 16, ----------, ------------

ii) 3, 5, 7, 9, ---------, -----------

**26)** புகையிரத நிலையமொன்றிலிருந்து பி.ப 2.45 இற்கு புறப்பட வேண்டியிருந்த புகையிரதம் 30 நிமிடங்கள் தாமதமாகிப் புறப்பட்டன.

i) புகையிரதம் புறப்பட்ட நேரம் யாது?....................................................

ii) புகையிரதம் புறப்பட்ட நேரத்தை நியம நேரமாக எழுதுக. ..................................

**27)** அம்மா பணியாரங்களைத் தயாரிப்பதற்கு 2l பாணியைக் கொண்டு வந்தார். அவற்றில் 1l 500 ml பாணி பயன்படுத்தப்பட்டது. எஞ்சிய பாணியின் அளவினை மில்லிலீற்றரில் எழுதுக?

..........................................................................................


**28)** பென்சிலின் நீளத்தை mm இல் எழுதுக.



..........................................................

**29)** வரைபை அவதானித்து விடை எழுதுக.

| பூக்கள் | எண்ணிக்கை |
|---|---|
| மல்லிகை | 04 |
| ரோஜா | 02 |
| செவ்வரத்தை | ....... |
| செவ்வந்தி | 03 |




i) வரைபை அவதானித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

ii) செவ்வந்தியை விரும்புவோரின் எண்ணிக்கையை வரைபில் குறித்துக் காட்டுக.

(30 புள்ளிகள்)

❖ **சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.**

**31)** சூரிய நமஸ்காரச் செயற்பாட்டின் ஒத்த படிநிலைகள்.
1) 4, 7 2) 3, 10 3) 2, 9

**32)** மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் மூன்றாவது படிநிலை.
1) மலர்வு 2) திடசித்தம் 3) உடலைத்தளர்த்துதல்

**33)** நாம் பொது இடத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளில் ஒன்றல்லாதது.
1) ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்.
2) முதியோருக்கு உதவுதல்.
3) பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

**34)** தேசியக் கொடியைச் சூழவுள்ள மஞ்சள் நிறம் குறித்து நிற்பது?
1) நாட்டின் தலைவர் 2) தமிழர் 3) தேசிய ஒற்றுமை

**35)** தேசியக் கொடியில் குறிப்பிடப்படாத இனம்.
1) தமிழர் 2) பறங்கியர் 3) முஸ்லீம்

**36)** எமது நாட்டிலுள்ள உலக மரபுரிமையாக விளங்குவது.
1) சிகிரியா 2) பெருக்க மரம் 3) ஓவியங்கள்

**37)** இலங்கை அணி கிரிக்கெட் போட்டியில் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய ஆண்டு.
1) 1986 2) 1976 3) 1996

**38)** புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு முன்னர் அனுமதி பெறச் செல்ல வேண்டிய இடம்.
1) பிரதேச சபை 2) கிராம சேவையாளர் 3) பிரதேச செயலகம்

**39)** தாவரம் நீர் கனியுப்புக்களை எதனூடாகப் பெற்றுக் கொள்கின்றது.
1) இலை மூலம் 2) தண்டு மூலம் 3) வேரின் மூலம்

**40)** வித்துக்களுடன் உண்ண வேண்டிய உணவு வகை
1)தக்காளி 2) பாகல் 3) புடோல்

## விடைகள்

**23.** 9.50, 22.00, 43.00, 7.25

**24.** 105 புத்தகங்கள் **25.** 50ml

**26.** i) 25, 36 ii) 11, 13 **27.** i) பி.ப. 3.15 நிமிடங்கள் ii) 15:15 **28.** 500ml

**29.** 35 mm **30.** i) 5 ii)

**31.** 3, 10 (2) **32.** திடசித்தம் (2) **33.** ஏனையோருக்கு இடைஞ்சல் விளை

**34.** தேசிய ஒற்றுமை (3) **35.** பறங்கியர் (2) **36.** சிகிரியா (1) **37.** 1996 (3)

**38.** பிரதேச சபை (3) **39.** வேர் மூலம் (3) **40.** தக்காளி (1)

---

கல்வி tv CHANNEL-1

**16.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**16.02.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# சம்மாந்துறை மருத்துவமனைக்கு உபகரணங்கள் கையளித்தார் சஜித்

சம்மாந்துறை, பெப். 16

**ஐக்கிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைவாக ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் "ஜனசுவய" சமூக நலத்திட்டத்தின் ஊடாக, சம்மாந்துறை ஆதார மருத்துவமனைக்கு சுமார் 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.**

அந்தக் கட்சியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம். ஏ. ஹசனலியின் அழைப்பின் பேரில் சம்மாந்துறை ஆதார வைத்திய சாலைக்கு நேற்று செவ்வாய்க்கிழமை விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த உபகரணங்களை மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் அஸாத் எம். ஹனிபாவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரதாச கலப்பதி, ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி பிரதம அமைப்பாளர் எம்.ஏ. ஹசன் அலி, கல்முனை தொகுதி பிரதம அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ்.ஏ. ரஸாக், அமைப்பாளர் கயான் தர்ஷன மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி முக்கியஸ்தர்கள், மருத்துவர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)



## மீன்பிடித்தவர் நீரில் மூழ்கி பலி!

மட்டக்களப்பு, பெப். 16

சந்திவெளி - மாவடிவேம்பு இயற்கைக்குளத்தில் தூண்டில் இட்டு மீன்பிடித்துக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 4 பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி பரமேஸ்வரன் (வயது 38) என்பவரே உயிரிழந்தார்.

கூலித்தொழிலாளியான இவர் தனது நண்பருடன் தூண்டிலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவேளை சேற்றில் புதையுண்டு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சந்திவெளிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## வீதிகளை திருத்துவதற்கான வேலைத்திட்டம் ஆரம்பம்!



திருகோணமலை, பெப். 16

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளை திருத்துவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே அவர்களின் தலைமையில் இதற்கான ஆரம்பகட்ட வேலைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மட்கோ பிரதான வீதி,முஹமதியா நகர் வீதி - புதுக்குடியிருப்பு வீதி வரையிலான 4கிலோ மீற்றர் தூரம் வரை வீதிகளே இவ்வாறு திருத்தப்படவுள்ளன. இந்தி வீதிகளின் திருத்தப் பணிகளுக்காக 12 கோடியே 64 இலட்சத்து 60 ஆயிரத்து 605 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சட்டவிரோத கசிப்பு உற்பத்தி; 94 பேருக்கு எதிராக வழக்கு!

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுவரித் திணைக்களம் நடத்திய விசேட நடவடிக்கைகளில் பெருமளவான கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டன.

கடந்த ஒரு மாத காலமாக நடத்தப்பட்ட இந்த முற்றுகையில் 16 கசிப்பு உற்பத்தி நிலையங்கள் முற்றுகையிடப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ். ரஞ்சன் ஆலோசனைக்கு அமைவாக மட்டக்களப்பு மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி நியூட்டன் அவுட்ஸ்கோன் தலைமையில் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



வாழைச்சேனை, வாகரை, செங்கலடி, கிரான் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்த முற்றுகை முன்னெடுக்கப்பட்டன. இதன்போது போதைப்பொருள் விற்பனை மற்றும் உற்பத்தி ஆகியவை தொடர்பில் 94 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாக மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் எஸ். ரஞ்சன் தெரிவித்தார்.

மேலும், கசிப்பு விற்பனை செய்த 47 பேருக்கும், சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட 12 பேருக்கும் சட்டவிரோத பியர் விற்பனை செய்த 11 பேருக்கும் சட்ட விரோத கள்ளு விற்பனை செய்த 4 பேருமாக எல்லாம் 94 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். (ஐ)

# கோப் பிரஸ் விற்பனை நிலையம் வவுணதீவில் நேற்று திறந்துவைப்பு

மட்டக்களப்பு, பெப். 16

வவுணதீவில் புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்திற்கமைவாக நாடளாவிய ரீதியில் “கிராமத்துக்கு கிராமம் வீட்டுக்கு வீடு” எனும் விசேட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் வழிகாட்டலில் வினைத்திறன் மிக்க கூட்டுறவுச் சங்கங்களை தெரிவு



செய்து இவ்வேலைத்திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகிறது.

அதற்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் 16 கோப் பிரஸ் வர்த்தக நிலையங்களை நிறுவுவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பு வவுணதீவில் புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஈச்சந்தீவு, கன்னன்குடா பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் நா. உருத்திரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன்

கலந்துகொண்டு புதிய கோப் பிரஸ் வர்த்தக நிலையத்தை நாடா வெட்டி உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தார்.

கிராம மக்களுக்கு குறைந்த விலையில் அனைத்து பொருட்களையும் இலகுவான முறையில் விநியோகம் செய்வதற்கான நடவடிக்கைகள் கோப் பிரஸ் வர்த்தக நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கனடாவில் அவசரகால நிலை பிரகடனம் செய்தார் ட்ரூடோ!

ஒட்டாவா, பெப். 16

கனேடிய வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத வகையில் தடுப்பூசி ஆணைக்கு எதிராக போராட்டங்களை கட்டுப்படுத்தும் வகையில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவசரகாலச் சட்டத்தைப் அமுல்படுத்தியுள்ளார்.

அவசரகால சட்டத்தின் பயன்பாடு நியாயமான, மற்றும் வரையறுக்கப்பட்ட அளவில் இருக்கும். இராணுவம் நிலைநிறுத்தப்படாது என ட்ரூடோ குறிப்பிட்டார்.

இதன்மூலம் போராட்டங்களுடன் தொடர்புடைய எந்தவொரு நபரினதும் தனிப்பட்ட கணக்குகளையும் நீதிமன்ற உத்தரவு இல்லாமல், வங்கிகள் முடக்கி வைக்க முடியும்.

பொலிஸாருக்கு இதன் மூலம் அதிக அதிகாரம் அளிக்கப்படும். பயங்கரவாத நிதியளிப்பு தடை உத்தரவை போன்று வாகன சாரதிகளின் போராட்டங்களை நிதியளிக்கும் மூலங்களைக் கண்டறிந்து முடக்கவும் பயங்கரவாத சட்டம் அதிக அதிகாரங்களை வழங்கும்.

“முற்றுகைகள் நமது பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கின்றன அத்துடன், பொது பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன” என்று நேற்று முன்தினம் அவசர கால சட்டத்தை அறிவித்து செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறினார்.

“சட்டவிரோத மற்றும் ஆபத்தான நடவடிக்கைகளை தொடர அனுமதிக்க முடியாது, அனுமதிக்க மாட்டோம்.” எனவும் அவர் குறிப்பிட்டார்.

கனடாவில் 1988 இல் நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்டம், தேசிய நெருக்கடி காலங்களில் அரசாங்கத்திற்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது.

கனேடிய நாட்டவர்கள் உயிர்கள், உடல்நலம் அல்லது பாதுகாப்பிற்கு தீவிரமாக ஆபத்தை விளைவிக்கும் எனக் கருதப்படும் அவசர மற்றும் நெருக்கடியான சூழ்நிலையில் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# விமானத்தின் கதவை திறக்க முயன்ற பயணி

## நடுவானில் பரபரப்பு

லொஸ் ஏஞ்சல்ஸ், பெப். 16

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் வொஷிங்டன் நகருக்கு “விமானம்-1775” வானில் சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராத விதமாக, அந்த விமானம் கன்சாஸ் சிற்றி விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

எதற்காக அந்த விமானம் தரையிறங்கியது என்ற தகவல் கிடைத்தபோது தான், விமானத்தில் அதிர்ச்சி தரக்கூடிய சம்பவம் அரங்கேறியுள்ளது தெரியவந்தது.

விமானம் பறந்து கொண்டிருக்கும்போது, விமானத்தில் உள்ள ஒரு பயணி, விமானியின் அறைக்குள் நுழைந்துள்ளார். அவர் அங்கிருக்கும் கட்டுப்பாட்டு பட்டனை பயன்படுத்தி விமானத்தின் ஒரு கதவை திறக்க முயன்றுள்ளார். இதனை சற்றும் எதிர்பார்க்காத விமானி, சுதாரித்துக்கொண்டு அவரை தடுத்தார். உடனே அங்கு வந்த விமானப் பணிப்பெண்கள் மற்றும் இதர பணியாளர்கள் அந்த நபரை கட்டுக்குள் கொண்டு வர முயன்றனர். ஒரு விமானப் பணியாளர் அந்த நபரின் தலையில் தேனீர் கோப்பையினால் அடித்து அவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்.



விமானத்தில் நடந்த இந்த சம்பவத்தை மத்திய புலனாய்வு அமைப்பு உறுதி செய்துள்ளது. விமானம் தரையிறங்கிய பின், மத்திய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் அந்த நபரை கைது செய்து அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த பயணி போதையில் இருந்தாரா, மலசலகூடம் என நினைத்து கதவை திறக்க முயன்றாரா அல்லது வேண்டுமென்றே அவ்வாறு செயல்பட்டாரா என பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெறுகிறது.

கடந்த வருடத்தில் மாத்திரம், அமெரிக்காவின் மத்திய விமான சேவை நிர்வாகம் இது போன்ற 5,981 முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. அவற்றுள் 4,290 முறைப்பாடுகள் விமானத்தில் முகக்கவசம் அணியாமல் பயணம் செய்தது தொடர்பானவை ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உக்ரைன் நெருக்கடிக்கு தீர்வு காணும் நம்பிக்கை அற்றுப்போய் விடவில்லை

## அமெரிக்கா, பிரிட்டன் தெரிவிப்பு



லண்டன், பெப். 16

உக்ரைன் நெருக்கடிக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பதற்கான நம்பிக்கை முற்றாக அற்றுப் போய் விடவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

எனினும் ராஜதந்திர ரீதியான அணுகல்கள் வலுவற்றதாகவே உள்ளதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

உக்ரைன் - ரஷ்யா மோதல் போக்கு தொடர்பில் ஜோ பைடன் மற்றும் போரிஸ் ஜான்சன் ஆகியோர் நேற்றுமுன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினர்.

சுமார் 40 நிமிடங்கள் நீடித்த இந்த உரையாடலில் பின்னரே ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் குறித்த எச்சரிக்கைகளுக்கு இடையிலும் இராஜதந்திர ரீதியான சமரசங்களுக்கு சாத்தியங்கள் இன்னமும் முற்றாக அற்றுப் போய்விடவில்லை என இருவரும் கூட்டாக தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், உக்ரைன் மீது ரஷ்யா எந்த நேரமும் தாக்குதல் நடத்த கூடிய அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதால் உக்ரைனில் தங்கியுள்ள அனைத்து அமெரிக்கர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா அறிவுறுத்தியுள்ளது.

அமெரிக்காவைத் தொடர்ந்து இங்கிலாந்து, கனடா, நெதர்லாந்து, லாட்வியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட 12 க்கும் மேற்பட்ட நாடுகள் உக்ரைனில் இருந்து தங்கள் பிரஜைகளை உடன் வெளியேறுமாறு எச்சரித்துள்ளன.

உக்ரைன் எல்லையில் 100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது. அத்துடன், அண்டை நாடான பெலாரஸூடன் பாரிய இராணுவப் பயிற்சிகளில் தற்போது ஈடுபட்டு வருகிறது.

மேலும் தனது நாட்டின் கடல் வழி அணுகலை முடக்கும் வகையில் நாட்டைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியங்களை ரஷ்யா முற்றுகையிட்டுள்ளதாக உக்ரைன் குற்றஞ்சாட்டியுள்ளது.

இவ்வாறான பதற்றங்களுக்கு மத்தியில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடாக இருந்து பிரிந்துசென்ற உக்ரைன் நேட்டோ கூட்டணிப் படையில் இணையாது என்பதை உறுதி செய்ய விரும்புவதாக ரஷ்யா அறிவித்துள்ளது. (அ)

# இந்தியா செல்லும் தடுப்பூசி போட்ட பயணிகளுக்கு தனிமைப்படுத்தல், பி.சி.ஆர். கட்டுப்பாடுகள் நீக்கம்!

புதுடில்லி, பெப். 16

இந்தியாவுக்குப் பயணம் செய்யும் வெளிநாட்டவர்களுக்கான தனிமைப்படுத்தல் மற்றும் கோவிட் பரிசோதனை உள்ளிட்ட கட்டுப்பாடுகள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் தளர்த்தப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகளை கண்காணிக்கவும், அவர்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு, 7 நாட்கள் தனிமைப்படுத்தவும் முன்னர் உத்தரவிடப்பட்டிருந்தது.

தற்போது தளர்த்தப்பட்ட கட்டுப்பாடுகள்படி வெளிநாடுகளில் இருந்து வருபவர்களில் இரண்டு தடுப்பூசிகளை போட்டவர்களுக்கு தனிமைப் படுத்தல் அவசியமில்லை என இந்திய மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேபோல் இரண்டு தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு விமான நிலையங்களில் பி.சி.ஆர் பரிசோதனை செய்யும் நடைமுறையும் நீக்கப்பட்டுள்ளது.

மேலும் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு அவர்களின் தடுப்பூசி நிலையை கருத்தில் கொள்ளாமல் விமான நிலையங்களில் கொரோனா பரிசோதனை தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கோவிட் தொற்று பரவல் குறைந்து வரும் நிலையில் கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 24 மணி நேரங்களில் இந்தியா முழுவதும் 50,000 க்கும் குறைந்த தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சம்பளப் பிரச்னையால்

# 90 வீதமான ஆசிரியர்களை பணி நீக்கியது சிம்பாப்வே!



ஹராரே, பெப். 16

சிம்பாப்வேயில் ஊதிய பிரச்னை தொடர்பாக, 90 வீத ஆசிரியர்களை அரசாங்கம் இடைநீக்கம் செய்துள்ளது.

ஆசிரியர்களின் வேலை நிறுத்தம் இரண்டாவது வாரத்தை எட்டியுள்ளபோதும், அரசாங்கத்துக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே உடன்பாடு எட்டப்படவில்லை.

இந்தநிலையில், பாடசாலைக்கு வராத ஆசிரியர்கள் மூன்று மாதங்களுக்கு இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என்று கல்வி அமைச்சு கடந்த வியாழக்கிழமை எச்சரித்திருந்தது.

ஆனால், கடந்த வாரம் புத்தாண்டின் முதல் தவணைக்காக பாடசாலைகள் திறக்கப்பட்டபோது பல ஆசிரியர்கள் பணிக்கு வரவில்லை.

சில பாடசாலைகள் ஆசிரியர்களோ மாணவர்களோ இல்லாத நிலையில் முற்றிலுமாக கைவிடப்பட்டன. தலைநகர் ஹராரேயில் உள்ள பாடசாலை வகுப்பறைகள் மற்றும் மைதானங்களில் மாணவர்கள் விளையாடி வருகின்றனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

பொதுப் பாடசாலைகளில் பணிபுரியும் சுமார் 140,000 பேரில் 135,000 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டதனை தொழிற்சங்கங்கள் கணக்கிட்டுள்ளன.

எனினும், அரசாங்கம் வேலைக்குச் செல்லத் தவறிய தற்காக 135,000 ஆசிரியர்களை இடைநீக்கம் செய்த பிறகு எந்த ஒரு தீர்வும் காணப்படவில்லை.

இது குறித்து சிம்பாப்வேயின் முற்போக்கு ஆசிரியர் சங்கத்தின் தலைவர் தகவாபிரா சோவ் கூறுகையில், '90 சதவீதத்திற்கும் அதிகமான ஆசிரியர்களை இடைநீக்கம் செய்வதன் மூலம் அரசாங்கம் பாடசாலைகளை மூடியுள்ளது.

குறைந்த ஊதியம் பெறும் ஆசிரியர் சுமார் 80 சிம்பாப்வே டொலர்கள் சம்பாதிக்கிறார், நாங்கள் (முன்னாள் ஜனாதிபதி ராபர்ட்) முகாபேயின் கீழ் நாங்கள் சம்பாதித்த 540 அமெரிக்க டொலர் சம்பளத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம்' என கூறினார்.

ஆசிரியர்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஊதிய முரண்பாடு மூன்று ஆண்டுகளுக்கு முந்தையது, அரசாங்கம் அமெரிக்க டாலர்களில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் இருந்து சிம்பாப்வே டொலர்களுக்கு மாறியது. அதன் மதிப்பு பணவீக்கத்தால் பலவீனமடைந்துள்ளது.

சிம்பாப்வேயில் உள்ள ஆசிரியர்கள் மாதத்திற்கு சராசரியாக 100 சிம்பாப்வே டொலர்கள் சம்பாதிக்கிறார்கள். (அ)

# சிறந்த வீரர்களுக்கான விருது பட்டியலை அறிவித்தது ஐ. சி. சி.

துபாய், பெப். 16

இந்த ஆண்டின் முதல் விருதான அதிசிறந்த ஐ. சி. சி வீரர், வீராங்கனை விருதுகளை தென்னாபிரிக்காவின் கீகன் பீற்றர்சன், இங்கிலாந்தின் ஹீதர் நைட் ஆகியோர் வென்றுள்ளனர்.

ஜனவரி மாதத்தின் அதிசிறந்த ஐசிசி வீரருக்கான விருதுக்கு 19 வயதுக்குட்பட்ட தென்னாபிரிக்க வீரர் டிவோல்ட் ப்ரெவிஸ், பங்களாதேஷின் வேகப்பந்துவீச்சாளர் ஈபாடொத் ஹொசெய்ன் ஆகியோருடன் கீகன் பீற்றர்சனும் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.



இந்தியாவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடரில் தென்னாபிரிக்காவின் வெற்றியில் பிரதான பங்காற்றியமைக்காக பீற்றர்சனுக்கு மாதத்தின் அதிசிறந்த ஐ. சி. சி. வீரர் விருது வழங்கப்பட்டது. இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட தொடரில் 3 அரைச் சதங்கள் உட்பட மொத்தமாக 276 ஓட்டங்களைப் பெற்று தொடரில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரரானதுடன் தொடர்நாயகன் விருதையும் வென்றிருந்தார். இவர் ஜனவரி மாதம் நடைபெற்ற 2 டெஸ்ட்களில் 3 அரைச் சதங்களுடன் 244 ஓட்டங்களை மொத்தமாக பெற்றிருந்தார்.

மகளிருக்கான ஐ. சி. சி. விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த இலங்கை அணித் தலைவி சமரி அத்தபத்து, மேற்கிந்தியத் தீவுகள் நட்சத்திரம் டியேந்த்ரா டொட்டின் ஆகியோரைவிட அதிக வாக்குகளைப் பெற்ற ஹீதர் நைட் மாதத்தின் அதிசிறந்த ஐ. சி. சி. வீராங்கனை விருதுக்கு சொந்தக்காரரானார்.

அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான பலவடிவ ஆஷஷ் கிரிக்கெட் தொடருக்கான ஒற்றை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஹீதர் நைட் அபாரமாகத் துடுப்பெடுத்தாடியதன் மூலம் இந்த விருதுக்கு உரியவரானார்.

முதல் இனிங்ஸை 9 விக்கெட் இழப்புக்கு 337 ஓட்டங்களுடன் அவுஸ்திரேலியா நிறுத்திக் கொண்ட பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து ஒரு கட்டத்தில் 8 விக்கெட்களை இழந்து 169 ஓட்டங்களை மாத்திரம் பெற்று பெரும் தடுமாற்றத்தை எதிர்கொண்டது.

எனினும் 3ஆம் இலக்க வீராங்கனையாக களம் நுழைந்திருந்த ஹீதர் நைட், 9ஆவது விக்கெட்டில் சொபி எக்லெஸ்டோனுடன் 100 ஓட்டங்களைப் பகிர்ந்து இங்கிலாந்தை கௌரவமான நிலைக்கு கொண்டுசென்றார்.

இங்கிலாந்து பெற்ற 297 ஓட்டங்கள் என்ற மொத்த எண்ணிக்கையில் ஹீதர் நைட் 168 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். இங்கிலாந்தின் முதல் 5 துடுப்பாட்டக்காரர்களும் திறமையாக துடுப்பெடுத்தாடி அவுஸ்திரேலியாவுக்கு பெரும் சோதனையைக் கொடுத்தனர். நட் சிவர் 58 ஓட்டங்களைப் பெற ஹீதர் நைட் பொறுமையுடன் துடுப்பெடுத்தாடி 48 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவுக்கு வந்தபோது இங்கிலாந்து அதன் 2ஆவது இனிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அப்போட்டியில் ஹீதர் நைட் 216 ஓட்டங்களை மொத்தமாக குவித்ததன் மூலம் ஐ. சி. சி. மாத விருதை வென்றெடுத்தார்.



## இந்தியா - மே. இ. தீவுகள் இருபது - 20 தொடர் இன்று

கொல்கத்தா, பெப். 16

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் இடையேயான இருபது - 20 போட்டி தொடர் இன்று கொல்கத்தாவில் ஆரம்பமாகிறது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகின்றது. ஒருநாள் போட்டித் தொடரை முழுமையாக இந்திய அணி வென்றுள்ள நிலையில், 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 இன்று ஆரம்பமாகிறது.

முன்னதாக இருபது - 20 தொடரில் ரசிகர்களுக்கு அனுமதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதிலும், முதல் போட்டியில் ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வரும் 18, 20ஆம் திகதிகளில் நடைபெறும் போட்டிகளிலாவது ரசிகர்களை அனுமதிக்குமாறு மேற்குவங்க கிரிக்கெட் சங்கம் இந்தியன் கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)



## டுபாய் ரென்னிஸ் சிமோனா வெற்றி!

டுபாய், பெப். 16

அமெரிக்காவின் அலிசன் ரிஸ்க்கை தோற்கடித்து இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார் சிமோனா ஹாலேப்.

பெண்களுக்கான டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்று ஆட்டத்தில் பிரபல வீராங்கனைகளான அமெரிக்காவின் அலிசன் ரிஸ்க்கும், ருமேனியா சிமோனா ஹாலேப்பும் மோதினர்.

இந்தப் போட்டியில் 6 - 2, 6 - 4 என்ற செற்கணக்கில் சிமோனா இலகுவாக வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதேவேளை, முதல் சுற்றுப் போட்டியில் இகா ஸ்வியாரெக், சினிகோவா, பெகுலா ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)

## இலங்கை அணிக்கு அபராதம்! நிசங்கவுக்கு கடும் எச்சரிக்கை!!

சிட்னி, பெப். 16

இரண்டாவது இருபது - 20 போட்டியில் தாமதமாக பந்துவீசிய இலங்கை அணியினருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியா சென்றுள்ள இலங்கை அணி, ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்கிறது.

சிட்னியில் நடந்த இலங்கை, அவுஸ்திரேலியா அணிகள் மோதிய இரண்டாவது இருபது - 20 போட்டி சமநிலையில் முடிவடையவே, சுப்பர் ஓவரில் அவுஸ்திரேலிய அணி வென்றது. இதனால், அவுஸ்திரேலிய அணி 2-0 என, முன்னிலையில் உள்ளது.

இப்போட்டியில் இலங்கை அணி குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்துவீச தவறியது. ஓர் ஓவர் தாமதமாக பந்துவீசிய இலங்கை வீரர்களுக்கு, நடுவர் டேவிட் பூன், போட்டி சம்பளத்தில் இருந்து 20 சதவீதம் அபராதம் விதித்துள்ளார்.

தவிர, போட்டியின் போது தவறான வார்த்தையை பயன்படுத்திய இலங்கை அணியின் தொடக்க வீரர் பதும் நிசங்காவுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. போட்டியில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டால் இவருக்கு, ஒரு அபராத புள்ளி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)





## சென். பீற்றர்ஸ்பேர்க் ரென்னிஸ் சம்பியன் வென்றார் கொன்டாவெய்ட்

சென். பீற்றர்ஸ்பேர்க், பெப். 16

சென். பீற்றர்ஸ்பேர்க் பெண்கள் ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில் வென்று எஸ்தோனியாவின் கொன்டாவெய்ட் மகுடம் சூடினார்.

இதன்மூலம் 1990ஆம் ஆண்டுக்கு பின், தொடர்ச்சியாக 20 உள் அரங்க போட்டிகளை வெல்லும் 6ஆவது வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில், 26 வயதான எஸ்தோனியாவின் அனெட் கொன்டாவெய்ட், (5-7, 7-6(7:4), 7-5) என்ற செட் கணக்கில் கிரேக்க வீராங்கனை மரியா சக்காரியை வீழ்த்தி மகுடம் சூடினார். இது அவர் வெல்லும் 6ஆவது டென்னிஸ் பட்டம் ஆகும். அவர் பெற்ற 6 பட்டங்களில் கடைசியாக பெற்ற 5 பட்டங்கள் கடந்த 7 மாதங்களில் நடைபெற்ற தொடர்களில் அவர் பெற்றவை ஆகும். மேலும் உலக தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறினார். (ஐ)

# ஊழியர் சேமலாப நிதியத்திடம் மேலதிக வரி அறவிடப்படாது!

### அடித்துக் கூறுகிறார் பந்துல

கொழும்பு, பெப். 16

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியத்திடமிருந்து 25 வீத மேலதிக வரி அறவிடப்படமாட்டாது என அரசு கூறியுள்ளது.

நல்லாட்சி அரசினால் 2017 தேசியவரி வருமானச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மாற்றமே நாட்டில் பெரும் சர்ச்சை ஏற்படக் காரணம் என்றும் குற்றம் சாட்டியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வர்த்தகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

எனவே பாராளுமன்ற குழுநிலை விவாதத்தின்போது இது தொடர்பான திருத்தங்கள் நிதி அமைச்சினால் முன்வைக்கப்படும் என அவர் கூறினார். இந்த உறுதிமொழியை மக்கள் துளியளவும் சந்தேகிக்கத் தேவையில்லை என்றும் அமைச்சர் பந்துல குறிப்பிட்டார். (அ)

# மற்றொரு தொடர் வேலைநிறுத்தம் மார்ச் 14ஆம் திகதி ஆரம்பமாகலாம்

கொழும்பு, பெப். 16

டிப்ளோமாதாரிகளின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் மார்ச் 14ஆம் திகதி முதல் நாடு முழுவதும் அரச மற்றும் மாகாண அரச சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து அந்தச் சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

06/2006, - 3/2016 இலக்க சம்பள முரண்பாடுகளை நீக்குதல், ரத்து செய்யப்பட்ட சிறப்பு செயல்திறன் மதிப்பீட்டு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளும் சம்பந்தப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (அ)

# சிறுவனின் வாயில் துப்பாக்கி வைத்து சுட்டவர் கைதாகினார்!

### ஆபத்தான நிலையில் சிறுவன்

கொழும்பு, பெப். 16

துப்பாக்கி இயங்குகின்றதா என்று, சிறுவனின் வாயில் வைத்து பரீசிலித்தபோது, துப்பாக்கியின் ரவை பாய்ந்ததினால், சிறுவன் ஆபத்தான நிலையில் பதுளை வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் துப்பாக்கியை பரிசீலனை செய்த 21 வயது இளைஞன் கொஸ்லந்தை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

கொஸ்லந்தைப் பகுதியின் கெலிப்பனவெல என்ற கிராமத்தில் மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே கிராமத்தைச் சேர்ந்த 12 வயது நிரம்பிய சிறுவனின் வாயிலேயே துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றிருக்கின்றது.

கெலிப்பனவெல கிராமத்தின் 21 வயதான இளைஞன், தம்மிடமிருந்த உள்ளூர் தயாரிப்பிலான கைத்துப்பாக்கியை சுத்தம் செய்துகொண்டிருக்கும்போது, அருகிலிருந்த சிறுவனின் வாயில் துப்பாக்கியை வைத்து பரிசீலனை செய்திருக்கின்றார். அவ்வேளையிலேயே துப்பாக்கி ரவை பாய்ந்து வெடித்திருக்கின்றமை ஆரம்ப பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

துப்பாக்கி சூடுபட்ட 12 வயது சிறுவன், பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சிகிச்சைகள் அளிக்கப்பட்டு, அம்புலன்ஸ் வாகனம் மூலம் பதுளை அரசினர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு தீவிர சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதிலும், சிறுவனின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## இராஜராஜ...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொல்லியல் துறையை (சென்னை) சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர்கள் இரா.இரமேஷ், ப.த.நாகராஜன், மோ.பிரசன்னா ஆகியோர் இலுப்பைத் தண்டலம் கிராமத்தில் இராஜ ராஜ சோழன் காலத்தைச் சேர்ந்த இன்னொரு கல்வெட்டைக் கண்டறிந்தனர். "இந்தக் கல் வெட்டு இராஜராஜ சோழனின் 24ஆம் ஆட்சி யாண்டில் (பொ.ஆ. 1009இல்) வெளியிடப் பட்டது. இந்தக் கல்வெட்டு மிக நீளமாக, கல்லின் இரு புறமும் செதுக்கப்பட்டுள்ளது. அவரின் மெய்க்கீர்த்தி உள்ளது. இதனை உடனடியாக முழுமையாகப் படிக்க முடி வில்லை" என்று அந்தக் கல்வெட்டைப் பற்றி இரமேஷ் கூறினார்.

பராந்தகச் சோழன் கல்வெட்டும் இந்தக் கிராமத்தை இலுப்பைத் தண்டலம் என்றே குறிப்பிடுகிறது என்றார் இரமேஷ். எனவே, இக்கிராமத்தின் பெயர் சுமார் 1,100 ஆண்டு களாக மாறாமல் இலுப்பைத் தண்டலம் என்றே வழங்கிவருகிறது. எல்லாக் கல்வெட்டுகளையும் இம்மூவர் படியெடுத்தனர். புதுவரவுகளான இந்தக் கல்வெட்டுகள் இலுப்பைத் தண்டலம் கிராம மக்களுக்கும் கல்வெட்டு ஆய்வாளர்களுக்கும் ஒருங்கே மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன.

\- இந்து



# கல்லுண்டாய் மக்கள் நேற்று வீதியை மறித்து போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 16

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட, கல்லூண்டாய்வெளி குடியிருப்பு மக்கள் நேற்று காலை வீதி மறியல் போராட் டத்தை முன்னெடுத்தனர்.

நீண்ட நாட்களாக தீர்வு வழங்கப்படாத தமது குடிதண்ணீர் பிரச்னைக்கு உடன் தீர்வு வழங்கவேண்டும் என குறிப்பிட்டு யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியின் கல்லூண்டாய் பகுதி வீதியை மறித்து வீதியின் குறுக்கே பொதுமக்களும் மாணவர்களும் அமர்ந்திருந்து கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் குறித்த வீதி ஊடான போக்குவரத்து ஒரு சில மணித்தியாலங்கள் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் போராட்ட இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் வீதியை வழிமறித்து போராட்டத்தை முன்னெடுத்த மக்களை அகற்றி போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தனர்.

தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்த மக்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்ட பொலிஸார் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வரவழைத்து தருவதாக வாக்குறுதி வழங்கியதை அடுத்து அதிகாரிகள் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வந்தனர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ( காணி ) எஸ்.





முரளிதரன், யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி. என்.சூரியராஜா, மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா உதயகுமார் உள்ளிட்டவர்கள் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் கலந்துரையாடினர்.

இந்த கலந்துரையாடலில் பிரச்னைக்கு உரிய தீர்வை உடனடியாக பெற்று தருவதாக தெரிவித்தோடு குடியிருப்பு பகுதிக்கும் நேரடியாக சென்று பார்வையிட்டதை அடுத்து மக்களின் போராட்டம் நிறைவு பெற்றது.

அத்தோடு கல்லூண்டாய் வெளி குடியிருப்பு மக்களின் குடிதண்ணீர் தேவைக்கு உடனடியாக தீர்வை வழங்குவதற்காக யாழ்.மாவட்ட இராணுவத்தின் 512ஆவது படைப்பிரிவால் குடிதண்ணீர் விநியோகம் ஒவ்வொரு வீடுகளுக்கும் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ-03)

# சிவகரன் 4ஆம் மாடிக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 16

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ். சிவகரனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸார் ஊடாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவரான வி.எஸ்.சிவகரனை கொழும்பில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் முன்னிலையாகும் போது அன்றைய தினம் குறித்த அமைப்பு சம்பந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்து வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# திடீரென அதிகரிக்கும் கோவிட் உயிரிழப்புகள்

### சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 16

இலங்கையில் கோவிட் நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு காணப்படுவதாகவும், இதனை சாதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டாம் எனவும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத் துவர் ஹேமந்த ஹேரத் தெரி வித்துள்ளார்.

கோவிட் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் முதியவர்கள் என அவர் மேலும் கூறினார்.

கோவிட் வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானவர்கள் அறிகுறியற்றவர்களாக இருப்பதால் தங்கள் வீடுகளில் உள்ள வயதானவர்களுக்கு வைரஸைக் கொண்டு செல்லும் போக்கு இருப்பதாகவும், நாள்பட்ட நோயாளிகள் மற்றும் வயதானவர்கள் வைரஸால் இறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் அவர் கூறினார்.

கோவிட் அறிகுறிகளை காட்டாமல், ஆரோக்கியமான நபராக சமூகத்தில் உள்ளவர்களில் சிலரை தெரிவு கோவிட் பரிசோதனை செய்து தொற்றாளர்களை அடையாளம் காண முடியும் என அவர் குறிப்பிட்டார்.

சமூகத்தில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத நபர்கள் உடனடியாக தடுப்பூசி செலுதத்திக் கொண்டால் மரணத்தை தடுக்க முடியும் என அவர் கூறினார்.

தற்போது அடையாளம் காணப்படும் கோவிட் தொற்றாளர்களுக்கு மோதுமான சிகிச்சை வழங்குவதற்கு வைத்தியசாலைகளில் கட்டில்கள் உள்ளதெனவும் நோயாளிகளுக்கு அவசியமான ஒட்சிசன் மற்றும் வேறு சிகிச்சைகள் வழங்கும் முறையை முகாமைத்துவத்துடன் முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## தமிழ்த்...

ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் காலை 9.30 மணியளவில் ஈழத் தமிழர் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வும் தேசிய,பிராந்திய,சர்வதேச நிலவரங்களும் எனும் தொனிப்பொருளை மையப் பொருளாக வைத்து இந்த மக்கள் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மக்கள் கருத்தரங்கு நிகழ்ச்சியில், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் “ஈழத்தமிழர் தீர்வில் பாராளுமன்றத்தின் வகிபங்கு“ எனும் தலைப்பில் உரையாற்றுவார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா ‘சமஸ்டித் தீர்வு: செல்வா முதல் இன்று வரை முயற்சிகளும் முட்டுக்கட்டைகளும்’ எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ‘ஈழத்தமிழர் தீர்வு நோக்கிய செயற்பாடுகளும் உறுதியான ஐக்கியத்தின் முக்கியத்துவமும்’ எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் ‘நல்லாட்சி அரசின் தீர்வு நோக்கிய செயல்பாடுகளும் சமகாலத்தில் வடக்கு,கிழக்கில் அரசின் முரண்பாடான செயல்திட்டங்களும்’ எனும் தலைப்பில் உரைநிகழ்த்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா ‘13இற்கு அப்பாலான பேச்சுவார்த்தைகள் பிரேமதாஸ தொடக்கம் மஹிந்த வரை ஒரு பகுப்பாய்வு’ எனும் தொனிப் பொருளில் உரையாற்றுவார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரச அறிவியல்துறை தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம் ‘ஈழத் தமிழர் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வும் இலங்கையில் இந்திய பாதுகாப்பு நலன்களும் ஓர் அரசியல் பொருளாதாரப் பார்வை’ என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

## காணாமல்...

அத்துடன், அரசாங்கத்திற்கு ஆதரவாக, விடயங்களை திரட்டி, அதனை சர்வ தேசத்துக்கு காண்பிக்கவே நீதி அமைச் சர் அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோர் நீதிச் சேவை முகாம்களை வடக்கில் நடத்தினர். அவர்களின் பயணம் நீதிக்கான பயணம் இல்லை. எங்கள் மத்தியில் பிழைகள் உள்ளன என்பது போன்று காட்டவே இவ்வாறு அவர்கள் செய்கின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

த. சித்தார்த்தன் எம். பி. நேற்று செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபை ஆணையாளரின் இலங்கை விடயம் தொடர்பான அறிக்கை இம்முறை அரசுக்கு எதிராக கடுமையாக இருக்கும். ஐ.நா ஆணையாளரின் அறிக்கை கடுமையானதாக இருக்கும் என நினைக்கின்றேன். இப்போது இலங்கை தமிழர்களுக்கு, அரசு செய்து வரும் செயல்களை அவர்கள் அறிவார்கள். ஆகவே, அடுத்த மாதம் நடைபெறும் ஐ. நா. சபை அமர்வில் அந்த அறிக்கை பாரப்படுத்தப்படும்.

அத்துடன் இந்த அறிக்கைக்கான செயல்பாடுகள் தொடர்பில் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐ. நா. சபையில் உறுதியான தீர்மானம் வெளிப்படும். சம்பந்தன் ஐயா ஏற்கனவே கடிதம் ஒன்றை சக நாடுகளுக்கு அனுப்பியுள்ளார். அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஐ. நாவுக்கு கடிதங்களை அனுப்பவுள்ளனர். ஒன்றிணைந்து எழுதுவது நல்லது. ஆனால் அதற்கு காலம் எடுக்கும். ஆகவே தனியாகவே கடிதங்களை வேகமாக அனுப்பவுள்ளனர் - என்றும் கூறினார். (ஐ)

அரசியல் ஆய்வாளரும், மூலோபாய கற்கைகளுக்கான திருகோணமலை நிலையத்தின் பணிப்பாளருமான அ. யதீந்திரா ‘சர்வதேச அழுத்தங்களும் சமஸ்டித் தீர்வை அடைவதில் முன்னால் இருக்கும் சந்தர்ப்பங்களும் சவால்களும்’ எனும் தலைப்பில் உரைநிகழ்த்துவார்.

அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ‘ஈழத் தமிழர் அரசியல் தீர்வில் இந்தியாவின் பிராந்திய சர்வதேச முக்கியத்துவம்’ என்ற தலைப்பிலும் உரையாற்றவுள்ளார். (அ)

## பயங்கர...

மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்று கையெழுத்திட்டனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் அனைவரையும் இணைந்துகொள்ளுமாறு சர்வஜன நீதி என்ற அமைப்பின் ஊடாக அதன் இணைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அழைப்பு விடுத்திருந்தார். (அ)

## ஐ.நா....

கப் பெற்றுள்ளது.

இதற்கு எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் பதில ளிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நியாயமான தீர்வு கிடைக்கும் என பாரிய நம்பிக்கை யுடன் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் பங்கேற்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் பெரும்பாலான சர்வதேச நாடுகள் இலங்கையின் நிலைப்பாட்டை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

## விமர்சன...

பின்னணியில் இவ்வாறான கருத்தை ஹனா சிங்கர் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயகத்தை உறுதி செய்வதில் ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் காத்திரமான பங்கை வகிக்கிறார்கள். கருத்து சுதந்திரம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை உறுதி செய்வதற்கு அவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது எனவும் இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## 48 மணிக்கு...

ஒமைக்ரோன் மற்றும் டெங்கு ஆகியவை வேகமாக அதிகரித்து வருவதை தாங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது. தவிர, தற்போது வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ சிகிச்சையை பெறலாமா வேண்டாமா என்று மக்கள் தங்கள் சொந்த முடிவுக்கு வரக்கூடாது என்றும் 48 மணித்தியாலத்துக்கும் மேலாக காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ ஆலோசனையை பெறுங்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## பீரிஸ்...

இலங்கை குழு ஜெனீவா செல்ல உள்ளது. அந்தக் குழுவில் அமைச் சர்களான ஜீ.எல்.பீரிஸ், அலி சப்ரி மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொள்ள உள்ளனர் என வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## அடுத்த 3...

ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை, இன்று புதன்கிழமை முதல் நீர் மின் உற்பத்தியில் 50வீதம் குறைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# பெற்றோல் விலையை உயர்த்த நிதி அமைச்சிடம் கோரிக்கை!

## பெற்றோலிய கூட்டுத்தாபனம் விடுத்தது

கொழும்பு, பெப். 16

இந்திய பெற்றோலிய நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளமையால் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமும் விலையை அதிகரிப்பதற்கு கோரிக்கை விடுத்துள்ளது. அதற்கு அனுமதி வழங்கப்படாதவிடத்து வரி சலுகையையேனும் வழங்குமாறு பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரியுள்ளது. நிதி அமைச்சிடம் இந்த கோரிக்கை விடுத்துள்ளது.

எரிபொருட்களின் தற்போதைய விலையைத் தொடர்ந்தும் பேணுவதால் ஏற்படும் பெருநட்டத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே சுமக்கிறது. நிதியின்மையால் வரும் நாட்களில் டொலரை பெறுவதும் சவாலானதாக மாறியுள்ளது. இதனால், எதிர்காலத்தில் நாட்டுக்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்படும் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் நிதி அமைச்சுக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, இந்த நிலைமையை கருத்தில் கொண்டு உடனடியாக எரிபொருளுக்காக வரிச்சலுகையை வழங்க வேண்டும் அல்லது எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டும் என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி அமைச்சைக் கோரியுள்ளது. (ஐ)

# வடக்கில் 14 தொற்றாளர் வவுனியாவில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். போதனா மருத்துவமனை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களின் முடிவுகளின்படி வடக்கில் 14 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். அத்துடன், வவுனியாவில் ஒருவர் தொற்றால் உயிரிழந்தார் என்றும் உறுதி செய்யப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூட முடிவின்படி சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 4 பேரும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவரும், யாழ். போதான மருத்துவமனையில் ஒருவரும் என 6 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு முடிவின்படி யாழ். போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் மூவருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் உயிரிழந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. (ஐ)

# சுகாதார உத்தியோகத்தர் போராட்டம் இடைநிறுத்தம்!

கொழும்பு, பெப். 16

18 சுகாதார தொழிற்சங்கங்றால் முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்த போராட்டத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இன்று புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் 14 நாட்களுக்கு தமது வேலை நிறுத்த போராட்டத்தை தற்காலிகமாக கைவிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார தொழில் நிபுணர்கள் அமைப்பின் ஏற்பாட்டாளர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு சுகாதார அமைச்சருடனான சந்திப்பைத் தொடர்ந்து நேற்று மாலை கூடி ஆராய்ந்த பின்னரே போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 90 இலட்சம் பெறுமதியான போதைப் பொருள்கள் மீட்பு

கொழும்பு, பெப். 16

மத்திய அஞ்சல் பரிமாற்று நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, போதைப்பொருள் அடங்கிய 5 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு கைப்பற்றப்பட்டவற்றின் பெறுமதி சுமார் 90 இலட்சம் ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பொதிகள் பிரித்தானியா, ஜேர்மனி மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவை போலி முகவரிகள் எனக் கண்டறியப்பட்டுள்ளன சோதனையின்போது, சந்தேகத்துக் கிடமான 5 பொதிகளை சோதனையிட்ட போது, அவற்றில் 472 கிராம் குஷ் எனப்படும் போதைப் பொருளும் , எக்டஸி எனப்படும் 302 போதை மாத்திரைகளும் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வத்திக்கான்...

பேராய ருடன் கடந்த சில தினங்களாக தொலைபேசி வழியாக பேச்சுக்களை நடத்தி, ஈஸ்டர் விவகாரம் குறித்த தகவல்களை பரிமாறிக்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும் கத்தோலிக்கர் என்பது விசேட அம்சமாகும்.

கர்தினாலின் வத்திக்கான் பயணம், இலங்கை அரசுக்கு மேலும் சிக்கலை உருவாக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (அ)

## கொரோனாவுக்கு...

கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 8 ஆண்களும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 12 ஆண்களும் 10 பெண்களுமாக 22 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 874 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வெளிநாடு...

கரிப்பு காரணமாக வெளிநாடு செல்வோருக்கான பி.சி. ஆர். பரிசோதனைகளை வைத்தியசாலையில் மேற்கொள்வதில் சிக்கல் நிலை காணப்பட்டது. இதையடுத்து, கடந்த 9ஆம் திகதி தொடக்கம் யாழ். போதனா மருத்துவமனையில் வெளிநாடு செல்வோருக்கான பி. சி. ஆர். சோதனைகள் மறு அறிவித்தல்வரை நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# போராட்டக்காரர்களின் மீது தாக்குதல் நடத்த வேண்டாம்

## ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவு

கொழும்பு, பெப். 16

போராட்டக்காரர்கள் மற்றும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது தடியடி மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகிக்கவேண்டாம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இந்த பணிப்புரையை விடுத்தார்.



எவருக்கும் எந்த வகையிலும் எதிர்ப்பு தெரிவிக்க அனுமதி வழங்கவேண்டும் எனவும் இது தொடர்பில் மக்கள் தீர்மானம் எடுப்பார்கள் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

போராட்டக்காரர்கள் மற்றும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக பொலிஸார் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் என அமைச்சர் சரத் வீரசேகர அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்த கருத்தை கவனத்தில் எடுத்த ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களுக்கு எதிராக அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையானால் தொடர்ந்தும் வேலைநிறுத்தம் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் சரத் வீரசேகர அமைச்சரவைக் கூட்டத்தில் கூறினார். (அ)

## அமைச்சர்களும் எம்.பிக்களும் சைக்கிளில் பயணிக்க நேரிடும்!

### மஹிந்த அமரவீர கூறுகிறார்



கொழும்பு, பெப். 16

எதிர்வரும் நாட்களில் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் சைக்கிளில் பயணிக்கவேண்டி ஏற்படுமென சுற்றுச் சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாதுகாப்பு பிரச்னைகளின் காரணமாக ஒரே நேரத்தில் இதனை நடைமுறைப்படுத்த முடியாவிட்டாலும், முறையாக என்றாவதொரு நாள் அமைச்சர்களும் எம்.பிக்களும் சைக்கிள்களில் பயணிக்க நேரிடும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்போது அரச அதிகாரிகள் சைக்கிளில் பணிக்கு வருவதாகவும், அது வரவேற்கத்தக்க வேலைத்திட்டமென்றும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானத்தை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 01 - 04 - 1939 |  | 15 - 02 - 2022 |

### சின்னத்துரை தவராசா

யாழ். கொம்மந்தறை வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தவராசா அவர்கள் 15.02.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை – சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும்,கமலேஸ்வரி(கிளி) அவர்களின் அன்புக் கணவரும், யோகச்சந்திரன், யோகராஜா, பகீரதன், மேகலா, பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ரஜனி, சிவகுமாரி, அனுசா, சுரேந்திரன், குகசக்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், துரைச்சாமி, சின்னராசா, இரத்தினம்மா, தம்பிராஜா மற்றும் சிவசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்ற குணரத்தினம், பண்டிதர் ச.வே பஞ்சாச்சரம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, ஈஸ்வரி, வைகுந்தவாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவினன், அபிராமி, அஸ்வினி, கவினா, கோகீஸ், வர்ஷா, சாம்பவி, லக்ஷி, சாயினி, மோனிகா ஆகியோரின் பாசமிகு பேரனும், அஜய் அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (16.02.2022) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் கொம்மந்தறையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ந.ப 12.00 மணியளவில் மயிலியதனை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**பகீரதன் - மகன்**
**Mobile : +447735270243**

தகவல்:
**குடும்பத்தினர்**

## களனிதிஸ்ஸ மின் நிலையம் நேற்று மீண்டும் செயலிழந்தது

கொழும்பு, பெப். 16

களனிதிஸ்ஸ ‘சொஜிட்ஸ்’ மின் உற்பத்தி நிலையம் மீண்டும் செயலிழந்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்றுக் காலை முதல் மின் உற்பத்தி நிலையம் செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அனல் மின் நிலையம் நிறுத்தப்பட்டதன் மூலம் 160 மெகா வோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இழக்கப்படும் என அந்த அதிகாரி மேலும் கூறினார். (அ)

## களனிபல்கலைக்கழகத்தின் மாணவர் இடையே மோதல்

கொழும்பு, பெப். 16

களனி பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் இரண்டு மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்தின் இறுதி ஆண்டு மாணவர்களால் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் தாக்கப்பட்டனர் என தெரிய வருகிறது.

அதனை தொடர்ந்து தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் இருவரும் ராகமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## தடையற்ற மின்சாரம் வழங்குவதில் மின்சார சபைக்கு கடும் சிரமங்கள்

### கூறுகிறார் டலஸ் அழகப்பெரும



கொழும்பு, பெப். 16

நிலவும் வரட்சி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மின்சார சபை தடையில்லா மின்சாரத்தை வழங்குவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏப்ரல் மாதம் வரை நாளாந்தம் ஒரு மணித்தியால மின்வெட்டை அமுல்படுத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அனுமதி கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளபோதிலும், அமைச்சரவைக் கூட்டத்தின்போது அது தொடர்பில் கலந்துரையாடப்படவில்லை.

அத்தகைய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால், அமைச்சரவை ஒரு முடிவை எடுப்பதற்கு முன்னர் அனைத்து உண்மைகளையும் பரிசீலிக்கும்.

இதேவேளை, அவசர மின்சாரக் கொள்வனவுகளுக்கு அனுமதி வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரம் எதுவும் நேற்று சமர்ப்பிக்கப்படவில்லை-என்றார். (அ)



6.5 மில்லியன் பெறுமதியான

## ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் நெல்லியடியில் கைது

யாழ்ப்பாணம், பெப். 16

நெல்லியடி பகுதியில் இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 817 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் நெல்லியடி பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் வடக்கு மற்றும் வடமத்திய கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது மோட்டார் சைக்கிளில் 817 கிராம் ஐஸ் போதைப்பொருளை கடத்திய சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டதோடு அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டது.

இதற்கிடையில், கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த மதிப்பு 6.5 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டள்ளது.

இந்த நடவடிக்கையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் பருத்தித்துறை மற்றும் குடத்தனை பிரதேசங்களைச் சேர்ந்த 23 மற்றும் 33 வயதுடையவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட போதைப்பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நெல்லியடி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.